Book 25

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# மாபெரும் அற்புதம்

# 19

அதன்மேல் 19 இருக்கிறது (74:30)

நிச்சயமாக இது மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்றாகும் (74:35)

மூன்றாம் ஆண்டு சிறப்பிதழ்

செப்டம்பர் 2001 September

PUTHIYA NINAIVOOTAL

TAMIL MONTHLY

## எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில்
   இடம் பெறும் அரபி எழுத்துக்கள் .......................................................................... 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ....................................................... 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ......................................... 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ............................................................19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 .............................................19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57.......................... 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை
   இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்............................19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும்
   சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி
   இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம்
   பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = .........................19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும்
   வார்த்தைகள் சரியாக ........................................................................................ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும்
   எழுத்துக்கள் சரியாக 76 .................................................................................. 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ..............................19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ............................................. 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக .................... 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட
    14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக்
    கூட்ட 29+14+14 = 57 = ........................................................................... 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட
    (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ......................................................................................19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை
    எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில்
    முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ............................................. 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும்
    முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ............................................. 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3,
    4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70,
    80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000,
    50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ......................... 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 2

செப்டம்பர் 2001
நினைவு 8

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ சத்திய வேள்வி
★ கடவுளின் வேதத்தில் கைவைத்த மனிதர்கள்
★ நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?
★ ஒன்பதாவது அத்தியாயத்தின் கடைசி இரண்டு வசனங்கள்
★ ஞானம் மிகுந்த குர்ஆன்
★ தூங்கி கொண்டிருக்கும் மானிட சமூகம்
★ நேர்வழி காட்டுகிறவர் வேதங்களை அருளிய கடவுள் ஒருவரே.
★ சரணடைதல்

# சத்திய வேள்வி

முதன்மையான வரும் முடிவான வரும். அந்தரங்கமான வரும் பகிரங்கமானவரும். மன்னிப்புக் கேட்பவர்களை மன்னிப்பவரும் அநியாயம் செய்பவர்களைத் தண்டிப்பவருமான கடவுளின் கிருபையால் புதிய நினைவூட்டல் தனது இரண்டாமாண்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு மூன்றாமாண்டில் அடியெடுத்து வைக்கின்றது.

தறிகெட்டு ஓடும் ஒரு மாட்டு வண்டியை நிறுத்திக் கட்டுப்படுத்த வண்டியின் முன் பெரிய கற்களைப் போடுவதோ வேகமாக உருண்டு கொண்டிருக்கும் சக்கரத்தைக் கைகளாலோ அல்லது கம்பாலோ நிறுத்த முயற்சிப்பதோ. அச்சாணியைக் கழற்றி விடுவதோ அல்லது மாட்டை மேலும் மேலும் அடிப்பதோ புத்திசாலித்தன மல்ல. இயற்கையான. சரியான வழிமுறையுமல்ல. அவ்வாறெல்லாம் செய்தால் வண்டியே கவிழ்ந்து விடக்கூடும். தறிகெட்டு ஓடும் மாட்டு வண்டியை நிறுத்த நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் அதன் மூக்கணாங்கயிறைப் பிடித்து இழுக்க வேண்டியது மட்டுமே.

அதே போல் ஜாதி, இனம், மதம் மற்றும் நிற வேற்றுமை காட்டி இழைக்கப்படும். அநீதிகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு. குற்றங்கள் மலிந்த மனிதம் மறந்த நிலையில் தறிகெட்டு ஓடும் இந்த சமூகத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நாம் செய்ய வேண்டியதெல்லாம் மானிட சமூகத்திற்கு கலப்பற்ற ஓரிறைக் கொள்கையைச் சரியாகப் போதிப்பது மட்டுமே. ஏனெனில் இன்று இந்த சமூகத்தில் நிலவும் அனைத்துச் சீர்கேடுகளுக்கும் மூலகாரணம் மானிட சமூகம் கலப்பற்ற ஓரிறைக் கொள்கையைக் கைவிட்டது மட்டுமே. அதிலிருந்துதான் அனைத்துச் சீர்கேடுகளும் ஆரம்பமாயின. மனிதர்கள் தங்களனைவரையும் படைத்தது ஒரே கடவுள்தான் என்ற அடிப்படை உண்மையை மறந்து இணைவைப்புக் கலந்த வெவ்வேறு கடவுள் கொள்கைகளை அமைத்து தங்கள் இஷ்டத்திற்குக் கடவுளைக் கற்பனை செய்து கொள்கின்றனர். எனவே மனிதர்கள் மெய்யான கடவுளை அஞ்சாமல், பொய்க்கடவுளின் துணை கொண்டு அந்த மெய்யான கடவுளிடம் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று தப்புக்கணக்குப் போட்டு அனைத்துச் சீர்கேடுகளையும் ஆரம்பித்து, வளர்த்துக் கொண்டு வருகின்றனர்.

எனவே அனைத்துச் சீர்கேடுகளையும் களையும் முயற்சியாக புதிய நினைவூட்டல் கடவுள் நாடினால் தொடர்ந்து அனைத்து வேதங்களும் போதித்த. கலப்பற்ற ஓரிறைக் கொள்கையை மக்களுக்கு நினைவூட்டும். கடவுளின் அனைத்துத் தூதர்களும் உலகில் தோன்றிய எல்லா மகான்களும் உலகுக்கு எடுத்துக் கூறிய சத்தியத்தை. நிலைநாட்டும் முயற்சியில் தொடர்ந்து பாடுபடும்.

சத்தியத்தைப் பிரகடனம் செய்யும் இந்த வேள்வியினால் விளையும் அனைத்துவிதமான எதிர்ப்புகளையும் எல்லாம் வல்ல கடவுளின் உதவியோடு எதிர்கொள்ள புதிய நினைவூட்டல் உறுதி பூண்டுள்ளது. கடவுள் அதற்குரிய வல்லமையைத் தந்தருள வேண்டுமென்று. அவரைத் தாழ்மையுடன் பிரார்த்திக்கிறோம்.

# கம்ப்யூட்டர்கள் பேசுகின்றன

ஜூன் 13. 2000 தேதியிட்ட "தி ஹிந்து" ஆங்கிலப்பத்திரிக்கையில் வெளியான செய்தி.

“எதிர்காலத்தில் காகிதத்தின் தேவை இல்லாமல் போய்விடும். - புதிய தொழில் நுட்பங்கள் தொலைபேசிகள் பார்க்கவும். கணிணிகள் பேசவும் வழிகோலுகின்றன. மைக்ரோசாஃப்ட் தலைவர் திரு. பில் கேட்ஸ் அவர்கள் தகவல் தொழில் நுட்ப மாநாடு 2000ல் கலந்து கொண்டு பேசும்பொழுது இன்னும் 10 வருடங்களில் கணிணிகள் அதிகமான நினைவுத்திறன் கொண்டவையாக இருக்குமென்றும். நவீன மென்பொருள்கள் (Software) காகிதத்தின் தேவையை அடியோடு நீக்கிவிடக்கூடியவையாக இருக்கின்றன.” என்றும் கூறினார்.

பேசும் பிராணி ஒன்று வந்து தங்களிடம் பேசவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கும் முஹம்மதியர்கள் உண்மையில் பேசக்கூடிய ஒரு விலங்காக கணிணிகள் வந்து கடவுளின் செய்தியை அறிவிப்பதை கேட்கும் நிலையில் இல்லை .

இவ்விதழில் கம்ப்யூட்டர் என்னும் விலங்கு. உலகிற்கு வெளிப்படுத்திய இறைவனின் செய்தியை கேட்டறிந்து கொள்க.

# கடவுளின் வேதத்தில் கைவைத்த மனிதர்கள்

**ரஷாத் கலீஃபா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த குர் ஆன் மொழிபெயர்ப்பின் அநுபந்தம் 24 லிருந்து**

ஒரு மனித சக்திக்கு அப்பாற்ப்பட்ட கணித கட்டமைப்பு அல்குர்ஆன் முழுவதும் ஊடுருவிப் பரவி நின்று அதில் உள்ள ஒவ்வொரு விஷயத்தையும் பாதுகாக்கவும், ஆதாரம் தந்து அங்கீகரிக்கவும் செய்கிறது.

நபியின் மரணத்திற்குப் பின்னர் 19 வருடங்கள் கழித்து சில எழுத்தர்கள் மதீனாவில் இறக்கப்பட்ட இறுதி அத்தியாயமான 9ன் இறுதியில் இரு போலி வசனங்களைத் திணித்தனர் இவ்வ நுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் மறுக்க இயலாதபடி இந்த மனிதத் திணிப்பை நீக்குகிறது. ஏற்கனவே இருந்த தூய்மையான நிலைக்கு மீட்கிறது மேலும் குர்ஆனின் கணிதக் குறியீட்டின் ஒரு முக்கிய பணியை செய்துகாட்டுகிறது அதாவது சிறிதளவும் சிதைக்க முடியாதவாறு குர்ஆனை பாதுகாப்பது. இவ்விதம் இக்குறியீடு 9:128-129ஐ மட்டும் மறுக்கிறது.

நிச்சயமாக நாமே இவ்வேதத்தை வெளிப்படுத்தினோம்
மேலும் நிச்சயமாக நாமே இதனைப்பாதுகாப்போம் 15:91

குர்ஆன் கடவுளின் இறுதி ஏற்பாடாகும் எனவேதான் இறைவன் அதனை பரிபூரணமாகப் பாதுகாப்பதாக உறுதி மொழி எடுக்கிறார் அது இறைவனிடமிருந்து அருளப்பட்டதுதான் என்பதை உறுதிப்படுத்துவதற்கும் அது பரிபூரணமாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவும் குர்ஆனின் ஆசிரியரான கடவுள் அதனை ஒரு கணித அமைப்பில் அருளியிருக்கிறார். முன்னரே நாம் கண்டுள்ளபடி இத்தகைய ஓர் கணிதக் கட்டமைப்பு மனித சக்திகளுக்கு மிகமிக அப்பாற்ப்பட்டது இறைவனின் இறுதி வேதத்தில் செய்யப்படும் சிறிதளவு சிதைவும் பளிச்செனத் தனித்து தெரிய வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு ஒரு அத்தியாயம், ஒரு வசனம். ஒரு வார்த்தை ஏன் ஒரு எழுத்தாயினும் அது வெளிப்படுத்தப்பட்டுவிடும்.

"நபி முஹம்மதின் மரணத்திற்கு 19 வருடத்திற்குப்பின்னர் கலீபா உதுமானின் ஆட்சியின் போது புதிய முஸ்லிம் நாடுகளுக்கு அனுப்பவேண்டி பல பிரதிகள் எடுப்பதற்காக ஒரு எழுத்தர்களின் குழு அமைக்கப்பட்டது முஹம்மதின் கரங்களால் எழுதப்பட்ட மூலக்குர் ஆனில் இருந்து பிரதிகள் எடுக்கப்படவிருந்தது. (பார்க்க பு.நி ஏப் 2000 )

இந்தக் குழு உதுமான் பின் அஃபான். அலீ இப்னு அபிதாலிப். ஜைதுப்னுதாபீத், உபை இப்னு கஃப், அப்துல்லா இப்னு அல்ஜுபைர். சையிது இப்னு அல் ஆஸ், மற்றும் அப்துர்ரஹ்மான் இப்னு அல் ஹாரித். இப்னு ஹிஷாம் ஆகியோரால் மேற்பார்வை செய்யப்பட்டது. நபி தனக்கு இறக்கப்பட்ட வரிசையிலேயே குர் ஆனை எழுதி வைத்திருந்தார் அதில் ஒவ்வொரு வசனமும் அதனதன் சரியான இடத்தில் அமைப்பதற்கு அவசியமான குறிப்புகளையும் எழுதியிருந்தார். மதீனாவில் இறுதியாக வெளிப்படுத்தப்பட்ட அத்தியாயம் 9. அதற்குப் பின்னர் ஒரே ஒரு சிறிய அத்தியாயம் 110 மினாவில் வெளிப்படுத்தப்பட்டது. எழுத்தர்கள் குழு இறுதியாக அத்-9க்கு வந்து அதனை அதன் சரியான இடத்தில் அமைத்தது. எழுத்தர்களில் ஒருவர் நபியை கண்ணியப்படுத்தி இரண்டு வசனங்களை சேர்த்து கொள்ள வேண்டும் என பரிந்துரைத்தார் பெரும்பான்மையான எழுத்தர்கள் இதற்கு ஒப்புக் கொண்டனர். அலீ மிகவும் கோபம் கொண்டு அதனை எதிர்த்தார். அவர் முஹம்மது நபியின் கரங்களால் எழுதப்பட்ட கடவுளின் வார்த்தைகள் சிறிதளவும் மாற்றப்படக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். அலீயின் எதிர்ப்பு ஏராளமான சரித்திர குறிப்புகளில் காணக் கிடைக்கிறது. இங்கே அவற்றில் மிகவும் தரமான ஜலாலுதின் அல்-ஸுயூத்தி எழுதிய (அல் அஸ்ஹரியா பிரஸ் எகிப்து - கெரோ 1318 பக்கம் 59) வெளியிட்ட அல் இத்கான் ஃபீ உலூமில் குர்ஆன் என்ற பதிப்பில் காணப்படும் குறிப்பை இங்கே கூறி அதை மறுபதிப்புச் செய்கிறோம்.

قعد علي بن أبي طالب في بيته فقيل ما أقعدك قال رأيت كتاب الله يزاد فيه
فحدثت نفسي أن لا ألبس ردائي الا الصلاة حتى اجمعه

Translation: 'Ali was asked: "Why are you staying home?" He said, "Some thing has been added to the Quran, and I have pledged never to put on my street clothes, except for the prayer, until the Quran is restored."

[ Insert 1)

மொழிபெயர்ப்பு : "ஏன் நீங்கள் வீட்டிலேயே இருக்கின்றீர்கள்?" என்று அலீயிடம் கேட்கப்பட்டது அவர் கூறினார். குர்ஆனில் சில சேர்க்கப்பட்டு விட்டது. குர்ஆன் மீட்கப்படும் வரை தொழுகைக்காகத்தவிர நான் என் வெளிச்செல்லும் ஆடையை அணிய மாட்டேன் என உறுதி மொழி பூண்டுள்ளேன்!!

அதன் பின்னர் ஏற்பட்ட சரித்திர நிகழ்வுகளை நாம் கவனித்தால் இக்கொடும் குற்றத்தின் பற்பல பரிமாணங்களை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

1. உதுமான் கொல்லப்பட்டார். தொடர்ந்து அலீ நான்காவது கலீஃபாவாக நியமிக்கப்பட்டார்.

2. புதிய கலீஃபா மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் ஒரு புறமும். குர்ஆனைச் சிதைத்த முஹம்மதியர்கள் மறுபுறமும் நிற்க 50 வருட போர் வெடித்தது

3. 'அலீ கொல்லப்பட்டார் அதன் தொடர் நிகழ்வாக அவருடைய குடும்பமும். முஹம்மதின் குடும்பமும் - சில பெண்களையும். குழந்தைகளையும் தவிர- கொல்லப்பட்டனர்.

4. இம்மாபெரும் சீரழிவின் உச்சவிளைவாக துர்பிரசித்தி பெற்ற கர்பளா களப்போர் ஏற்பட்டது. அங்கே அலீயின் மகன் ஹீசேன் மற்றும் அவருடைய குடும்பத்தினர். ஆதரவாளர்கள் ஆகியோர் கொடூரமாக கொல்லப்பட்டனர்.

5. முஸ்லிம்களுக்கு தூய்மையான சிதைவற்ற குர்ஆன் 1400 வருடங்களுக்கு தடுக்கப்பட்டது.


குர்ஆனை சிதைத்தவர்கள் இறுதியில் போரில் வெற்றி பெற்றனர். அத்துடன் நமக்கு கிடைத்த 'அதிகார பூர்வமான சரித்திரம் வெற்றி பெற்றவர்களின் கண்ணோட்டத்தையே கூறியது. கடவுளின் எதிரிகளுக்கு கிடைத்த இந்த போலி வெற்றி கடவுளின் நாட்டப்படியே என்பதை நாம் அறிவோம். மரணத்திற்குப் பின் இருபது வருடங்களுக்குள்ளாக. நபியால் மக்காவில் தோற்கடிக்கப்பட்ட வருடம் 632 A.D இணை வைப்பாளர்கள் மீண்டும் இணைவைப்புக்குத் திரும்பினர். விதி வசமாக இம்முறை முஹம்மது அவர்களுடைய இணைத்தெய்வமாக ஆனார்.

- வெளிப்படையாக இத்தகைய இணைவைப்பாளர்கள் தூய்மையான குர்ஆனைப் பெறுவதற்கு தகுதியற்றவர்கள். எனவே குர்ஆனை மீட்க முயன்ற உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு கடவுள் வீரமரணத்தை கொண்டு ஆசீர் வதித்தார் மேலும் கடவுளுடைய வார்த்தைகளின் விரோதிகளுக்கு ஒரு போலி வெற்றியை அளித்தார். இந்த மிக நீண்ட, பெரும் சீரழிவை விளைவித்த போருக்கு பின் வந்த முதல் அமைதி காலத்திய ஆட்சியாளர் மர்வான் - இப்னு அல் ஹக்கம் ஆவான் (இறப்பு 65 AH / 684 AD) அவன் செய்த முதல்

வேலைகளில் ஒன்று முஹம்மது நபியின் கரங்களால் கவனத்துடன் எழுதப்பட்ட குர்ஆன் பிரதியை அழித்தது ஆகும். இதற்குக் காரணம் அது 'புதிய குழப்பங்களுக்கு' காரணமாக ஆகிவிடும் என்பதுதான் (பார்க்க: உலூாம் அல் குர்ஆன் அஹமது வான் டென்ஃபர் இஸ்லாமிக் பவுண்டேசன் இங்கிலாந்து பதிப்பு 1983, பக்கம் 56)

ஒரு புத்திசாலி மனிதன் கேட்க வேண்டிய கேள்வி : 'அப்போது புழக்கத்தில் இருந்த குர்ஆனுடன் முஹம்மது நபியின் மூலக்குர்ஆன் பிரதி ஒத்ததாக இருக்கும் பட்சத்தில் ஏன் அதனை மர்வான் இப்னு ஹக்கம் அழித்தான்?!

மிகப் பழைய இஸ்லாமிய சரித்திர குறிப்புகளை நாம் காணும் போது 9:128, 129 ஆகிய இவ்விரு வசனங்கள் எப்போதும் சந்தேகத்துக்குரியதாகவே இருந்து வந்திருக்கின்றது உதாரணமாக (புகாரியின் பிரசித்தி பெற்ற ஹதிஸிலும் அல் ஹதீஸ் பெருமானாரின் பொன்மொழிப் பேழை என்ற தலைப்பில் 'ஸஹீஹ் ஸித்தாஹ்'வின் இரண்டாம் பகுதியாக மூன்றாம் பதிப்பு. 89ல் வெளிவந்த யுனிவர்சல் பப்லிஷர் வெளியிட்ட புத்தகத்தின் புகாரி திர்மதி 1897 ஆம் எண்ணிட்டதும் 1898ம் எண்ணிட்டதும், பக்கம் - 798-799) ஸுயுத்தியின் பிரசித்தி பெற்ற இத்கானிலும் குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வசனத்திற்கும் ஏராளமான சாட்சிகள் இருந்தது. 9:128.129 க்குத்தவிர அவை ஹீதைமா இப்னு தாபித் அல்அன்சாரி என்ற ஒரே ஒருவரிடம் மட்டுமே காணப்பட்டது. முறையற்ற இவ்விதிவிலக்கைக் குறித்து சிலர் கேள்வி எழுப்பிய போது (யாரென்று தெரியாத) மற்ற ஒருவர் ஹீதைமாவின் சாட்சி இரு சாட்சிக்குச் சமம் என்ற ஒரு 'ஹதீது' டன் வந்தார்!! விநோதமாக போலித் திணிப்புக்கள் 9:128.129ஐ மக்காவில் அருளப்பட்டது என்று பாரம்பரிய குர்ஆன் பிரதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.




The Title Figure of Sura 9 from a standard Quran, showing that this sura is Medinan, "except for the last two verses; they are Meccan"!!!
[Insert 2 ]

சூரா ஒன்பதின் முகப்பு பாரம்பரிய பிரதிகளில் உள்ளபடி இதில் இந்த அத்தியாயம் மதீனாவில் இறக்கப்பட்டதாகவும் இவ்விரு வசனங்கள் மட்டும் மக்காவில் அருளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த

'மக்கா' வசனங்கள் நபியின் இறுதிக் காலத்தில் இஸ்லாத்தில் சேர்ந்த 'மதீனா' வாசியான ஹீதைமாவிடம் மட்டும் காணப்பட்டது எப்படி?! நபி மக்காவை மதீனத்து வசனங்கள் என்று அடையாளமிடப்பட வேண்டும் என்பது அனைவருடைய ஒருமித்த முடிவாக இருக்கும் நிலையில் மதீனாவில் இறக்கப்பட்ட ஒரு அத்தியாயத்தில் மக்காவில் இறக்கப்பட்ட வசனங்கள் இருப்பது எப்படி? இந்த முரண்பாடுகள் மட்டுமல்லாது இன்னும் ஏராளமான முரண்பாடுகளும் கேள்விகளும் 9:128-129 வசனங்கள் குறித்து இருந்த போதிலும் அவற்றின் அங்கீகாரத்தை குறித்து எவரும் கேள்வி எழுப்ப துணியவில்லை, 1974ல் குர்ஆனுடைய அற்புதக் கணிதக் குறியீடு கண்டுபிடிக்கப்பட்ட பின் குர்ஆனில் உள்ள ஒவ்வொரு விஷயமும் ஆதாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு புதிய சகாப்தம் உருவாகியது. இப்போது நாம் காண்கிறபடி 9:128,129 ஆகிய இரு போலி வசனங்களின் திணிப்பு கீழ் கண்ட விளைவுகளை ஏற்படுத்தியது

1. குர்ஆன் உடைய கணிதக் கட்டமைப்பு ஒரு முக்கிய பணியை நடைமுறைப் படுத்தி காட்டியது
2. அது மட்டுமே ஒரு தனித்து நிற்கும் அற்புதமாக திகழ்கிறது.

3. உண்மையான நம்பிக்கையாளர்களிலிருந்து நயவஞ்சகர்களை பிரித்துக்காட்டுவது (நயவஞ்சகர்கள் பாரம்பரிய செய்திகளை ஆதரிப்பார்கள்)

இவ்விரு போலி வசனங்களின் மொழிபெயப்பு: உங்களுக்கு எந்த சிரமத்தையும் நேருவதை விரும்பாத உங்களைப் பற்றி கவனம் எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு தூதர் உங்களிலிருந்தே உங்களிடம் வந்திருக்கிறார் மேலும் அவர் நம்பிக்கையாளர்கள் மீது மிகவும் இரக்கமுடையவராகவும், நிகரற்ற அன்புடையவராகவும் இருக்கிறார். அவர்கள் திரும்பிவிட்டால் பின்னர் கூறும்; கடவுள் எனக்குப் போதுமானவர் அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை நான் என் பாரத்தை அவர் மீது வைக்கிறேன் அவரே மகத்தான சிம்மாசனத்தின் இரட்சகர் ஆவார்.

## கண்கூடான ஆதாரங்கள்

1. குர்ஆன் உடைய அற்புதக் கணிதக்குறியீட்டிலிருந்து 9:128,129 ஆகிய வசனங்கள் விலகி நிற்பது அல்லாஹ் என்ற வார்த்தையை எண்ணத்துவங்கிய பொழுது தான் வெளிப்பட்டது. குர் ஆன் முழுவதும்

இவ்வார்த்தையின் எண்ணிக்கை 2699 ஆக இருந்தது. இந்த எண் 19ஆல் வகுபடக் கூடியது அல்ல, ஒன்று நீக்கப்பட்டால் ஒழிய. ரஷாதின் ஆங்கிலக் குர்ஆன் மொழிபெயர்ப்பில் ஒவ்வொரு பக்கத்தின் கீழாக அதுவரை இடம்பெற்ற அல்லாஹ் (G O D ) என்ற வார்த்தைகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது அதன் இறுதியில் காணப்படும் எண் 2698 = 19x142 ஏனெனில் போலித் திணிப்புக்கள் 9:128,129 நீக்கப்பட்டு விட்டது.

2. அல்லாஹ் (கடவுள்) என்ற வார்த்தை இடம்பெறும் அனைத்து வசனங்களின் எண்களையும் கூட்டினால் |18|23 என்ற எண் வருகிறது. அதாவது 19x6217. இந்த எண், எங்கெங்கெல்லாம் (கடவுள்) அல்லாஹ் என்ற வார்த்தை இடம் பெறுகிறதோ அந்தந்த வசனங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் எண்கள் அனைத்தையும் கூட்டினால் நமக்குகிடைப்பதாகும் 9:129ல் அல்லாஹ் என்ற வார்த்தை இடம் பெறுவதால் அதனைச் சேர்த்தால் இந்த அமைப்பு மறைந்து போகும்.

3. ரஷாதின் மொழிபெயர்ப்பில் காட்டப்பட்டுள்ளபடி 9வது அத்-தின் கடைசி வரை இடம் பெறும் அல்லாஹ் (G O D ) என்ற வார்த்தையின் எண்ணிக்கை 1273 = : 19x67. போலித்திணிப்புக்கள் 9:128,129ஐ சேர்த்துக் கொண்டால் 1274 வரும் இது 19ன் பெருக்குத் தொகை அல்ல.

4. முதன் முதல் இடம் பெறும் முத்திரை எழுத்திலிருந்து ("அ.ல.ம" 2:1) கடைசியாக இடம்பெறும் முத்திரை எழுத்து ("நூன்" 68) வரை உள்ள வசனங்களின் இடையே இடம்பெறும் அல்லாஹ் (G O D ) என்ற வார்த்தையின் எண்ணிக்கை 2641 = 19XI39 முத்திரை எழுத்துக்களுக்கு வெளியே உள்ள அத்-களை இங்கு பட்டியலிடுவது இலகுவானதாக இருப்பதால் அட்டவணை 1ல் அல்லாஹ் என்ற வார்த்தை அப்பகுதியில் 57 முறை இடம் பெறுவது காட்டப்பட்டுள்ளது மொத்தமுள்ள அல்லாஹ் என்ற வார்த்தையின் எண்ணிக்கை 2698 லிருந்து 57ஐ நாம் கழித்தால் நமக்கு கிட்டுவது 2641 = 19 X 139 அதாவது முதல் முத்திரையிலிருந்து கடைசி முத்திரை எழுத்து வரை உள்ள வசனங்கள் இடம் பெறும் அல்லாஹ் என்ற வார்த்தை 2641 அப்பகுதிக்கு வெளியில் இடம் பெறும் அல்லாஹ் என்ற வார்த்தையின் எண்ணிக்கை 57!! மனித திணிப்புக்களாக 9:128:129ஐ நாம் சேர்த்துக் கொண்டால் முதல் மற்றும் கடைசி முத்திரை எழுத்துக்களுக்கு இடையில் உள்ள அல்லாஹ் (GOD) என்ற வார்த்தையின் எண்ணிக்கை 2642 ஆக இருந்திருக்கும் இது 19ன் பெருக்குத் தொகை அல்ல.

5. - அத்-9, ஒரு முத்திரை எழுத்து இல்லாத அத்தியாயம் ஆகும், முத்திரை எழுத்துக்கள் இல்லாத 85 அத்தியாயங்களை நாம் நோக்கினால் அவற்றில் 57 அத்-களில் அல்லாஹ் (G O D ) என்ற வார்த்தை இடம் பெறுவதை நாம் காணலாம் 57=19 x 3 இந்த 57 அத்-களில் கடவுள் என்ற வார்த்தை இடம் பெறும் வசனங்களைக் கூட்டினால் நமக்குக் கிடைப்பது 1045 = 19 x 5 5 மனிதத் திணிப்புக்கள் 9:128,129ஐ நாம் சேர்த்தால் அல்லாஹ் என்ற வார்த்தை இடம் பெறும் வசனங்களில் ஒன்று அதிகமாக இருக்கும்

6. பிஸ்மில்லாஹ் இடம் பெறாத அத்-த்திலிருந்து (9) இருமுறை பிஸ்மில்லாஹ் இடம் பெறும் (அத்27:30 வரை) உள்ள 19அத்-களின் வசனங்களில் அல்லாஹ் (GOD) என்பதன் எண்ணிக்கை 513 ஆகும் 513 = 19-X 2 7 போலி வசனங்கள். 9: 128,129 ஐ நாம் சேர்த்தால் அல்லாஹ் (GOD) இடம் பெறும் வசனங்களின் எண்ணிக்கை 514 ஆக ஆகி இருக்கும் இந்த அற்புத அமைப்பு மறைந்து போயிருக்கும்.

7. கடவுள் என்ற பொருள் தரும் இலாஹ் என்ற வார்த்தை 9:129ல் இடம் பெறுகிறது முழுக்குர்ஆனி-லும் இவ்வார்த்தை 95 முறை இடம் பெறுகிறது 95=19 x 5: 9:128,129 ஐச் சேர்த்தால் ஒன்று (1) கூடி 96ஆக ஆகிவிடும்.

அட்டவணை-1 : முத்திரையிடப்பட்ட பகுதிக்கு வெளியே இடம் பெறும் 'அல்லாஹ் என்ற வார்த்தை " அத் எண் அல்லாஹ்' எண் 'அல்லாஹ்'

| அத் எண் | அல்லாஹ் | அத் எண் | அல்லாஹ் |
|---|---|---|---|
| 1 | 2 | 84 | 1 |
| 69 | 1 | 85 | 3 |
| 70 | 1 | 87 | 1 |
| 71 | 7 | 88 | 1 |
| 72 | 10 | 91 | 2 |
| 73 | 7 | 95 | 1 |
| 74 | 3 | 96 | 1 |
| 76 | 5 | 98 | 3 |
| 79 | 1 | 104 | 1 |
| 81 | 1 | 110 | 2 |
| 82 | 1 | 112 | 2 |
| | | | 57 |
| | | | 19X3 |

(அட்டவணை -2) பிஸ்மில்லாஹ் இல்லாத இடத்திருந்து அதிகமான ஒரு பிஸ்மில்லாஹ் இருக்கும் இடம் வரை "அல்லாஹ்" எனும் வார்த்தை வரிசை

| வரிசை எண் | அத் எண் | அல்லாஹ்' உள்ள வசனங்கள் |
|---|---|---|
| 1. | 9 | 100 |
| 2. | 10 | 49 |
| 3. | 11 | 33 |
| 4. | 12 | 34 |
| 5. | 13 | 23 |
| 6. | 14 | 28 |
| 7. | 15 | 2 |
| 8. | 16 | 64 |
| 9. | 17 | 10 |
| 10. | 18 | 14 |
| 11. | 19 | 8 |
| 12. | 20 | 6 |
| 13. | 21 | 5 |
| 14. | 22 | 50 |
| 15. | 23 | 12 |
| 16. | 24 | 50 |
| 17. | 25 | 6 |
| 18. | 26 | 13 |
| 19. | 27 | 6 |
| ......... | ......... | ......... |
| 19 | 342 | 513 |

மொத்தம் = 19,
அத். எண்களின் கூட்டுத்தொகை = 342 = 19X18
மொ. வசனங்கள் :313 : 19X 27

8. The Index to the Words of the Quran என்ற புத்தகத்தில் குர் ஆன்-ல் 116 முறை ரசூல் என்ற வார்த்தை இடம்பெறுவதாக பட்டியலிடப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று 9:128ல் உள்ளது. இதை நாம் நீக்கி விட்டு பார்க்கும் போது 115 'ரசூல்' என்ற வார்த்தை உள்ளது. இந்த எண்ணிக்கையிலிருந்து நாம் நீக்கவேண்டிய மற்றொரு ரசூல் எனும் வார்த்தை 12:50ல் இடம் பெறுகிறது. ஏனெனில் அது பிர்அவ்னுடைய தூதரைக் குறிக்கிறது. கடவுளுடைய தூதரை அல்ல. எனவே கடவுளுடைய 'ரசூல்' (தூதர்) என்ற வார்த்தை குர்ஆன்-ல் 114 முறை இடம் பெறுகிறது 114= 19 X 6

9. போலி வசனங்கள் 9:128.129ல் இடம்பெறும் மற்றொரு முக்கிய வார்த்தை 'ரஹீம்' என்பதாகும் (நிகரற்ற அன்புடையவர்) இவ்வார்த்தை குர்ஆன் ல் எல்லா இடங்களிலும் இறைவனுக்கு மட்டுமே பயன்படுகிறது. 9:128ல் நபியைக் குறித்துக் கூறப்படும் ரஹீம் எனும் வார்த்தையை நாம் நீக்கினால் நமக்கு கிடைப்பது ||4. 7:188, 10:49. மற்றும் 72:21 ஆகிய வசனங்களின் படி நபிக்கு சுயமாக கருணை காட்டக் கூடிய சக்தி எதுவும் இல்லை.

10. மேலே கூறப்பட்ட Index 'அர்ஷ்' என்ற வார்த்தை 22 முறை குர் ஆனில் இடம்பெறுவதாக பட்டி யலிடப்பட்டுள்ளது. போலி வசனம் 9:129ல் இடம்பெறும் 'அர்ஷ்' என்ற வார்த்தையையும், 12:100ல் குறிப்பிடப்படும் யூசுஃப் ன் அரஷ் எனும் வார்த்தையையும் 27 : 23ல் குறிப்பிடப்படும் ச பா அரசியின் 'அர்ஷ்" என்னும் வார்த்தையையும் நீக்கினால் நமக்கு கிடைப்பது அல்லாஹ்வின் 'அர்ஷ்' என்ற வார்த்தையின் எண்ணிக்கை 19. இது 9:129ல் இடம்பெறும் 'அர்ஷ்' என்ற வார்த்தை குர்ஆனை சேர்ந்தது அல்ல என்பதை நிரூபிக்கிறது.

11. குர்ஆனி-ன் கட்டளையான 'குல்' (கூறும்) என்ற வார்த்தை குர் ஆன்-முழுமையும் 332 முறை இடம்பெறுகிறது அவ்வாறே மற்றொரு வார்த்தையான 'காலு' (அவர்கள் கூறினார்கள்) 332 என்ற அதே எண்ணிக்கையில் இடம்பெறுகிறது போலிவசனம் 9:129ல் குல் என்ற வார்த்தை இடம் பெறுகிறது. இதனை நாம் சேர்த்தால் தனித்து தெரிகின்ற மேற்கண்ட வித்தியாசமான அமைப்பு மறைந்து போய்விடும்.

12. குர் ஆனி -ல் 6234 எண்ணிடப்பட்ட வசனங்களும் 112 எண்ணிடப்படாத வசனங்களும் (பிஸ்மில்லாஹ்கள்) உள்ளன. இவ்விதம் குர்ஆனில் உள்ள வசனங்களின் மொத்த எண்ணிக்கை 6346, 19x334. போலிவசனங்கள் 9:128.129. குர்ஆன்-ன் இந்த மிக முக்கிய அளவுகோலினை மீறுகிறது.

13. மேற்கண்ட வார்த்தைகளில் உள்ள அற்புத அமைப்புகளை மட்டுமின்றி குர்ஆன்-ன் அற்புதக் கணித அமைப்பை 9:128.129 ஆகிய திணிப்புக்கள் பற்பல விதங்களில் மீறுகின்றன. நாம் ஒவ்வொரு அத்-தையும், இடம் பெறும் வசனங்களின் எண்ணிக்கையையும். வசன எண்களின் கூட்டு தொகையையும் (l+2+3+4+.....+ 'n' இங்கே 'n' என்பது வசனங்களின் எண் ஆகும்). மேலும் ஒவ்வொரு அத்தியாயத்தின் எண்ணையும் அவற்றுடன் கூட்டினால் நமக்குக் கிட்டும் கூட்டுத் தொகை 346199 அதாவது |9x|9x959. இந்த அற்புத அமைப்பு குர்ஆன்ல் உள்ள ஒவ்வொரு வசனத்தையும் ஆதாரத்துடன் அங்கீகரித்து உறுதிப்படுத்துகிறது. இந்த அமைப்பில் 9:128,129 ஐச் சேர்த்தால் இறைவனின் அற்புதக் குறியீடு மீறப்படுகிறது. அட்டவணை 3-ஆனது விஷயம் 13ல் காட்டப்பட்ட கணிதக்குறியீட்டின் சுருக்க வடிவமாகும். அதனை நாம் நோக்கினால் 9: 128.129 ஐச் சேர்க்கும் பொழுது இவ்வற்புத அமைப்பு மறைந்து போவதை நாம் காணமுடியும்.

அட்டவணை 3 19ல் அமைந்த குர்ஆனின் அத். மற்றும் வசனங்களின் கணிதக் குறியீடு

| அத்- எண் | வசன எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 28 | 36 |
| 2 | 286 | 41041 | 41329 |
| . | . | . | . |
| 9 | 127 | 8128 | 8264 |
| . | . | . | . |
| 114 | 6 | 21 | 141 |
| 6555 | 6234 | 333410 | 346199 |
| | | | 19 X 19 X 959 |

அட்டவணை -4 : குர்ஆன்-உடைய 85 முத்திரையிடப்படாத அத்-களின் கணிதகுறியீடு.

| அத்- எண் | வசன எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 7 | 28 | 36 |
| 4 | 176 | 15576 | 15756 |
| . | . | . | . |
| 9 | 127 | 8128 | 8264 |
| . | . | . | . |
| 114 | 6 | 21 | 141 |
| | | | 156066 |
| | | | 156066 = (19 X 8214) |

14. விஷயம் 13ல் குறிப்பிடப்பட்ட கணக்கிடும் முறையை நாம் 9வது அத்-ஐ உட்படுத்திய 85 அத்-களில் மட்டும் பிரயோகித்துப் பார்த்தால் நமக்குக் கிடைக்கும் எண்ணும் 19-ன் பெருக்குத் தொகையே ஆகும். முத்திரையிடப்படாத அனைத்து அத்-களிலும் மேற்கண்ட கணித முறை பிரயோகிக்கப்படும் போது கிடைக்கும் எண் 156066. அதாவது 19X8214

15. குர்ஆனின் துவக்கத்திலிருந்து அத்-9ன் இறுதிவரை உள்ள முத்திரையிடப்படாத அத்-களின் அத் எண்களையும் அவற்றில் இடம்பெறும் வசனங்களின் எண்ணிக்கைகளையும் நாம் கூட்டினால் நமக்கு கிட்டுவது 703 விரிவான விபரங்கள் அட்டவணை 5ல் கொடுக்கப்பட்டுள்ளது இந்த அற்புத அமைப்பு அத்-9 : 127 வசனங்கள் கொண்டது என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது

அட்டவணை - 5 குர்ஆன்-ன் துவக்கத்திலிருந்து அத்- 9 வரை உள்ள முத்திரையிடப்படாத அத்களும் அவற்றின் வசனங்களும்

| அத். | வசனங்கள். | மொத்தம் |
|---|---|---|
| 1 | 7 | 8 |
| 4 | 176 | 180 |
| 5 | 120 | 125 |
| 6 | 165 | 171 |
| 8 | 75 | 83 |
| 9 | 127 | 136 |
| | | 703 |
| | | (19 X 37) |

16. முத்திரையிடப்படாத அத்-களின் அத்தியாய எண்களையும் அவற்றில் இடம்பெறும் வசன எண்களையும் குர் ஆனில் பிஸ்மில்லாஹ் இல்லாத அத்தியாயம் 9:1ல் இருந்து குர்ஆன்-ன் இறுதிவரை உள்ள வசன எண்களின் கூட்டுத் தொகையையும் நாம் கூட்டினால் நமக்குக் கிடைக்கும் மொத்த எண் 116090 அல்லது 19 x 6110. இந்த விபரங்கள் அட்டவணை 6ல் கொடுக்கப்பட்டுள்ளன. 9:128.129ஐ நாம் சேர்த்தால் அத்-9ன் வசனங்கள் 129 என் மாறும்பொழுது மொத்தக் கூட்டுத் தொகை 116349ஆக மாறி 19ஆல் வகுபடாது. நாம் கண்ட இந்த அற்புத அமைப்பு இதன் மூலம் மறைந்து போய்விடும்

அட்டவணை - 6
பிஸ்மில்லாஹ் இல்லாத அத் -லிருந்து குர்ஆன்-ன் இறுதிவரை உள்ள முத்திரை இடப்படாத அத்-களும் அவற்றின் வசனங்களும்

| அத்-எண் | வசன எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 127 | 8128 | 8264 |
| 16 | 128 | 8256 | 8400 |
| . | . | . | . |
| 113 | 5 | 15 | 133 |
| . | . | . | . |
| 114 | 6 | 21 | 141 |
| | | | 116090 |
| | | | (19 X 6110) |

17. விஷயம் 16ல் கூறப்பட்ட அதே கணக்கிடும் முறையை பிஸ்மில்லாஹ் இல்லாத இடத்தில் (9:1) இருந்து 27ம் அத்ல் அதிகப்படியான பிஸ்மில்லாஹ் உள்ள இடம்வரை நாம் பிரயோகித்தால் மொத்தக்கூட்டுத்தொகை 119966= 19x6314 அத் 9க்கு 129 வசனங்கள் இருந்திருந்தால் இவ்விஷேச அமைப்பு சிதைக்கப்பட்டிருக்கும் அவ்வெண் 19ஆல் வகுபடாது. விரிவான அட்டவணை ரஷாதின் ஆங்கில குர்ஆன் மொழி பெயர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ளது இன்ஷா அல்லாஹ் பிஸ்மில்லாஹ் இல்லாததன் காரணத்தை நாம் விரிவாக ஆராயும் போது அவற்றை விபரமாக காணலாம்.

18. விஷயங்கள் 16,17 ல் கூறப்பட்ட அதே கணக்கிடும் முறையை பிஸ்மில்லாஹ் இல்லாத அத்-த்தின் (9) துவக்கத்திலிருந்து 19ஐ பற்றி இறைவன் குறிப்பிடும் வசனம் வரை (74:30) நாம் பிரயோகித்துப் பார்த்தால் நமக்கு கிட்டும் மொத்த கூட்டுத்தொகை 207670=19X10930 இது அத்-9, 127 வசனங்கள் கொண்டது என்பதை நிரூப்பிக்கிறது

அட்டவணை 7 பிஸ்மில்லாஹ் இல்லாத இடத்திலிருந்து 74:30வரை உள்ள அத்-களும் வசனங்களும்

| அத்-எண் | வசன எண்ணிக்கை | வசன எண்களின் கூட்டு | மொத்தம் |
|---|---|---|---|
| 9 | 127 | 8128 | 8264 |
| 10 | 109 | 5995 | 6114 |
| . | . | . | . |
| 73 | 20 | 210 | 303 |
| . | . | . | . |
| 74 | 30 | 465 | 569 |
| 2739 | 4288 | 200643 | 207670 |
| | | | (19 X 10930) |

19. அத்-9, 127 வசனங்கள் கொண்டது 127-ல் இடம் பெறும் இலக்கங்களை நாம் கூட்டினால் 1+2+7 = 10 பிஸ்மில்லாஹ் இல்லாத இடமான 9:1 முதல் அதிகப்படியான பிஸ்மில்லாஹ் இடம்பெறும் இடம் வரை 27:29 உள்ள அனைத்து வசனங்களிலும் 10 என்ற இலக்கத்தை கூட்டுத் தொகையாக கொண்ட அனைத்து வசனங்களையும் நாம் நோக்கினால் வரக்கூடிய மொத்த எண் : 2470 = 19 X 130 அத் 129 வசனங்கள் கொண்டதாக இருக்கும்பட்சத்தில் அது 2472 என வரும் இது 19ன் பெருக்குத் தொகை அல்ல அத்துடன் மேற்கண்ட கண் கூடான அற்புத அமைப்பும் மறைந்து போயிருக்கும்.

☆☆☆☆☆

அட்டவணை-8
9:1 முதல் 27:29 வரை உள்ள வசனங்களில் இலக்கக் கூட்டு தொகையாக கொண்ட வசன எண்கள்,

| அத். எண் | வசன. எண்ணிக்கை | கூட்டினால். 10 வருபவை | மொத்த. எண்ணிக்கை |
|---|---|---|---|
| 9 | 127 | 12 | 148 |
| 10 | 109 | 10 | 129 |
| 11 | 123 | 11 | 145 |
| 12 | 111 | 10 | 133 |
| 13 | 43 | 3 | 59 |
| 14 | 52 | 4 | 70 |
| 15 | 99 | 9 | 123 |
| 16 | 128 | 12 | 156 |
| 17 | 111 | 10 | 138 |
| 18 | 110 | 10 | 138 |
| 19 | 98 | 9 | 126 |
| 20 | 135 | 12 | 167 |
| 21 | 112 | 10 | 143 |
| 22 | 78 | 7 | 107 |
| 23 | 118 | 11 | 152 |
| 24 | 64 | 6 | 94 |
| 25 | 77 | 7 | 109 |
| 26 | 227 | 22 | 275 |
| 27 | 29 | 2 | 58 |
| 342 | 1951 | 177 | 2470 |

342 = 19 X 18 & 2470= 19 X 130

## உவமை

மனிதர்களே!

ஓர் உவமை கூறப்படுகின்றது. அதனை மிக்க கவனத்துடன் கேளுங்கள் :

கடவுளையன்றி (வேறு) எவர்களை (உதவிக்கு) அழைக்கின்றீர்களோ அவர்கள் அனைவரும் சேர்ந்து ஓர் ஈயை படைக்க விரும்பினாலும் படைக்க முடியாது!

ஏன் அந்த ஈ அவர்களிடமிருந்து எதையேனும் பறித்து கொண்டு போனாலும் கூட அதனிடம் இருந்து அதனை திரும்ப கைப்பற்றவும் முடியாது. தேடுகின்றவர்களும் தேடப்படுபவர்களும் பலஹீனர்களே. (22:73)

# நாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

Dr. ரஷாத் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த குர்ஆன். அனுபந்தம் 24லிருந்து

எல்லாம் வல்லவர் அவருடைய செய்தியைப் பாதுகாக்கவும் ஆதாரமளிக்கவும் தந்திருக்கும் ஏராளமான கண்கூடான ஆதாரங்கள் எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி மூன்று விஷயங்களை நிரூபிக்கின்றது.

a. எந்தவிதமான ஒரு சிதைவும் குர்ஆனில் நுழைய முடியாது.

b. போலி வசனங்கள் 9:128-129 குர் ஆனைச் சேர்ந்தது இல்லை .

C. குர்ஆனில் உள்ள ஒவ்வொரு விஷயமும் - அத்தியாயங்களின் எண்கள்.

வசனங்களின் எண்கள், அத்தியாயங்களுக்கும் வசனங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட எண்கள், முக்கிய வார்த்தைகள் குர்ஆனில் இடம்பெறும் எண்ணிக்கை. வார்த்தைகளின் எண்ணிக்கை. எழுத்துக்களின் எண்ணிக்கை சில குறிப்பிட்ட வார்த்தைகளின் தனித்தன்மை வாய்ந்த. வழமைக்கு மாறுபட்ட எழுத்தமைப்புக்கள் மிகவும் அப்பாற்பட்ட விதத்தில் அற்புதமான கணிதக் கட்டுமானத்தில் கடவுளால் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இரு போலி வசனங்கள் பற்றிய கணிதத் தகவல்கள் மட்டுமே தனித்த முறையில் ஓர் அற்புதமாக உள்ளது. இவை மட்டுமே விரிவானதாகவும் அனைத்தையும் சூழ்ந்ததாக இருந்தபோதிலும் முழுமையான குர்ஆனின் அற்புதக் கட்டமைப்பை மிகைத்ததாகவோ அல்லது அதற்குச் சமமானதாகவோ கூட இல்லை. (முழுமையான கணிதக் கட்டமைப்பின் அற்புதம் குறித்த தகவல்களை பு.நி. வெளியிட்டுள்ளது)

a. குர் ஆனின் அற்புதக் கணிதக் கட்டமைப்பின் முக்கிய பணியைச் செயல்படுத்திக் காட்டுதல்.

b. குர் ஆனைச் சிதைப்பதற்கு ஒருபோதும் முடியாது என்ற உண்மையை நிரூபிப்பது.

C. நம்பிக்கை கொண்டோரையும். நயவஞ்சகர்களையும் வேறுபடுத்திக் காட்டி. நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவேன் என்ற இறை வாக்குறுதியை நிறைவேற்றுவது.

முஹம்மத் நபியின் மரணத்திற்குப் பின் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே இஸ்லாம் (சரணடைதல்) பெருமளவில் பாழ்படுத்தப்பட்டு விட்டதால் கடவுள் 47:38இல் கூறியுள்ளபடி பகிரங்கமாக தன் வாக்கை நிறைவு செய்தார். முஹம்மத் என்ற தலைப்புக்கொண்ட அத். 47 வசனம் 38ல் (19 X 2) கூறப் பட்டிருக்கும் இறைவிதியின்படி 'அரபிகள் குர்ஆனை மட்டும் பின்பற்றுவதிலிருந்து தவறிவிட்டால், கடவுள் அவர்களைத் தன் அருளிலிருந்து நீக்கி அவர்களுடைய இடத்தில் வேறு சமுதாயத்தினரைக் கொண்டு வருவார்.

முஹம்மத் நபியின் மரணத்திற்குப் பின் சில வருடங்களுக்குள்ளாகவே அரபியர்கள் குர்ஆனைச் சிதைத்து அதற்காக நபியின் குடும்பத்தார் அனைவரையும் கொலை செய்தபோது அவர்கள் 47:38ல் இறைவன் கூறிய சாபத்திற்கு உள்ளானார்கள். அதற்குமேல் அவர்கள் குர்ஆனை - உண்மையான குர் ஆன் - வைத்திருக்கும் தகுதியை இழந்தார்கள். அரபியர்கள் ஒட்டுமொத்தமாகக் குர்ஆனைப் பின்தள்ளிப் புறக்கணித்து விட்டதால் இந்த ஆதாரம் மறுக்க முடியாத ஒன்றாகிறது.

உதாரணமாக இன்றுவரை முஸ்லிம் நாடுகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஒரு நாட்டில் கூட பள்ளிவாசல்கள் கடவுளுக்குரியவை. அங்கே கடவுளைத் தவிர வேறு எவரையும் நீங்கள் அழைக்கக் கூடாது' (72:18) என்ற மிக முக்கியக் கட்டளை பின்பற்றப்படுவதில்லை. தொழுகைக்கான அழைப்புக் கூட இப்போது கடவுளுக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டதாக இல்லை.

"இஸ்லாத்தின் அடிப்படை' குர்ஆனில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. 3:18. 47:19 மேலும் அதன் வார்த்தைகள் கீழ்கண்டவாறு இருக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ளது. 'லா இலாஹ இல்லல்லாஹ்' (கடவுளுடன் வேறு கடவுள் இல்லை) ஆனால் ஹிஜ்ரீ முதலாம் நூற்றாண்டில் இருந்தே முஸ்லிம்களுக்கு முஹம்மதுடன் சேர்த்து அழைக்கப்படாவிட்டால் கடவுள் தேவையில்லை என்றானது. இதனை நாம் நடைமுறையில் காணவேண்டுமென்றால் ஏதேனும் ஒரு பள்ளிவாசலுக்குள்ளே நுழைந்து 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று பிரகடனம் செய்தால் போதும். இது உண்மையில் இன்றைய முஸ்லிம்களைக் கோபத்தில் ஆழ்த்தி விடும். இவர்களின் இத்தகைய நடவடிக்கையைக் குர்ஆன் வசனம் 39:45 பதிவு செய்திருக்கின்றது. மேலும். என்னுடைய ஆய்வுகளின் அடிப்படையில். இன்றையப் பாரம்பர்ய முஸ்லிம்கள். இறைவனால் குர்ஆனில் அறிவிக்கப்பட்ட சரியான ஷஹாதத்தை (சாட்சியம்) உச்சரிப்பதை விட்டும் தடுக்கப்பட்டுள்ளனர் என்று நான் நிச்சயமாக நம்பிக்கை

கொண்டுள்ளேன். அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ் என்ற இந்தக் குர்ஆனிய (சாட்சியை) ஷஹாதத்தை முஹம்மதை அழைக்காமல் அவர்களால் ஒரு போதும் கூற இயலாது. நீங்களே சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். சிதைக்கப்பட்ட இன்றைய இஸ்லாத்தின் முதல் தூண் ஆன 'அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' என்ற சாட்சியம் முஹம்மத் நபியின் மூலம் நாம் பெற்ற இறைக் கட்டளைகளான குர்ஆனுக்குச் சற்றும் பொருந்துவதாக இல்லை. அத்துடன் மட்டுமில்லாமல் இந்த முஹம்மதிய ஷஹாதத்தின் மூலம் மற்ற ஏராளமான குர்ஆனின் கட்டளைகள் மீறப்படுகின்றன. உதாரணமாக கடவுளின் தூதர்களுக்கு இடையில் நாம் எவ்விதப் பேதமும் பாரபட்சமும் காட்டக் கூடாது என்று குர்ஆன் மீண்டும் மீண்டும் கட்டளையிடுகின்றது. (2:136. 285, 3:84)

சிதைக்கப்பட்ட இந்த ஷஹாதத் முஹம்மத் நபியின் விருப்பத்திற்கு மாறாக அவருக்கு ஒரு தனித்தன்மை தந்து மற்ற தூதர்களை விடவும் அவரைச் சிறப்பித்து பாரபட்சம் காட்டி வேறுபடுத்திக் காட்டுகின்றது. இவ்வேதம் முழுமையானது. மிகச் சரியானது. விவரிக்கப்பட்டது என்று குர்ஆன் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினாலும் முஸ்லிம்கள்' அவர்களுடைய படைப்பாளரை நம்ப மறுத்து விட்டனர். அவர்கள் கேலிக்குரியதும். அறிவுக்கு பொருந்தாததுமான 'ஹதீஸ் மற்றும் சுன்னா' வை ஏற்றுக் கொண்டு ஆதரிக்கின்றனர். இறைவனுக்கும் அவருடைய தூதருக்கும் எதிரான அவர்களுடைய இந்த ஏகமனதான கலகத்தினால் - மொத்தமாக அனை வரும் பளிச்சிடும் இணைவைப்புக்குத் திரும்பியதால். அவர்களுடைய நபியையும் நல்லோர்களையும் கடவுளுக்கிணையாக ஆக்கியதால் இறைவன் 47:38ல் கூறிய தன் உறுதிமொழியை நிறைவேற்றினார்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள மறுக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையிலும் மேலும் 19ன் அற்புதம் குறித்த (நாம் முன்னர் வெளியிட்ட) ஏராளமான தகவல்களின் அடிப்படையிலும் கீழ்கண்ட வசனங்களின் சிறப்பை ஒருவர் எளிதாக மதிப்பீடு செய்ய இயலும்.

நிச்சயமாக நாமே இந்தச் செய்தியை வெளிப்படுத்தினோம். மேலும், நிச்சயமாக நாமே அதனைப் பாதுகாப்போம் (15:9)

கூறும் : எல்லா மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து இதைப் போன்ற ஒரு குர் ஆனை கொண்டு வர முயன்றால் அவர்கள் தோல்வியுறுவார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வளவு உதவிகள் செய்து கொண்டாலும் சரியே. (17:38)

இது ஒரு தெளிவான வேதமாக இருந்தபோதிலும் நிராகரிப்பாளர்கள் இந்தச் செய்தி அவர்களிடம் வந்தபோது இதனை அவர்கள் மறுத்தனர். சேர்ப்பதன் மூலமோ. நீக்குவதன் மூலமோ எந்தப் பொய்யும் அதில் நுழைய முடியாது. ஏனெனில் இது மிகுந்த ஞானமுடைய மிக்க புகழுக்குரியவரால் இறக்கப்பட்டது. (41:41-42)

நாம் இந்தக் குர் ஆனை ஒரு மலையின் மேல் இறக்கியிருப்போமானால் அது கடவுளின் மேல் உள்ள பெருமதிப்பால் உருண்டு பொடியாகிப் போவதை நீ காண்பாய் (59:21)

★★★★★★★★★★★★★★★★★★

# ஒன்பதாவது அத்தியாயத்தின் கடைசி இரண்டு வசனங்கள்

ஆங்கில ஆக்கம் : ரஷாத் கலீஃபா மொழியாக்கம் : கே எஸ் அபுபக்கர் சித்திக்

ஒன்பதாவது அத்தியாயத்தின் கடைசி இரண்டு வசனங்கள் 9-128.129 குர்ஆனின் வசனங்கள் அல்ல. பொய்யாக பின்னாளில் இடைச்செருகப்பட்டது என்பதை ஆதாரத்துடன் அறிவித்தது முதல் (Muslim Perspective-March 1985 ) இது தொடர்பாக ஆட்சேபனைகளை விட ஆதரவையே நான் அதிகம் கிடைக்கப் பெற்றேன். ஆட்சேபனைகளிலும் சில அவர்களின், கணித கட்டமைப்பு அம்சங்கள் புரிந்து கொள்வதில் உள்ள குறைபாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது. உதாரணத்திற்கு அவர்களில் சிலர் குர் ஆனின் அட்டவணையில் தூதர் (Rasool) என்கிற வார்த்தை 116 தடவை இடம் பெற்றுள்ளதை குறிப்பிட்டு, 1985ல் தூதர் என்கிற வார்த்தை குர்ஆனில் 115 தடவை வருவதாக நான் வெளியிட்டுள்ள அறிவிப்பை குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இதன் முக்கியமான அம்சம் என்னவென்றால் குர்ஆனில் இடம் பெற்றுள்ள ரசூல் (தூதர்) என்கிற வார்த்தைகளின் ஒரு ரசூல் (தூதர்) பிர்அவ்னுடைய ரசூல் (I2:50) அதாவது பிர்அவ்னுடைய தூதரை குறிக்கக்கூடியதாக இருப்பதால் அந்த ரசூல் என்கிற வார்த்தைகள் அல்லாஹ்வுடைய ரசூல்களோடு சேர்த்து கணக்கிடப்படவில்லை. மற்றொரு உதாரணம் அர்ஷ்-Arsh என்கிற வார்த்தை. இதன் அர்த்தமாவது ஆட்சி அதிகாரம், அல்லது அரண்மனை (மாளிகை) அல்லது சிம்மாசனம் சில ஆட்சேபணையாளர்களை 'அர்ஷ்' என்கிற இந்த வார்த்தையின் எண்ணிக்கை குறித்தும் அதாவது என்னுடைய அறிவிப்பை விட அட்டவணையில் ஒரு அர்ஷ் கூடுதலாக இருப்பதாகவும் எழுதியுள்ளனர்.

இதிலும் அர்ஷ் என்கிற வார்த்தையின் எண்ணிக்கையில் அரசி ஷீபாவின் அர்ஷ் (27:23) எனவரும் வாக்கியத்தில் உள்ள 'அர்ஷ்' என்கிற வார்த்தையை நீக்காமல் கணக்கிடுவதே அவர்கள் ஆட்சேபனைக்கு காரணமாக அமைந்துள்ளது. இந்நிலையிலும் அவர்கள் அத்தியாயம் ஒன்பதின் கடைசி இரு வசனங்களில் உள்ள மற்ற வார்த்தைகள் குர்ஆனின் அற்புதமான கணித அம்சங்களை மீறுவனவாக உள்ளன என்பதும் என்னோடு ஒத்து போகக் கூடியவர்களாகவே, அதாவது இந்த அடிப்படை உண்மையில் என்னுடைய கருத்தை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

பெரும்பான்மையான ஆட்சேபனைகள் தவறே நடக்காத உறுதியான தெய்வீக சட்டமான "குர்ஆனின் பாதுகாப்பு" (o r) " பாதுகாக்கப்பட்ட குர்ஆன்" என்ற மையத்தை சுற்றியே அமைந்துள்ளது.

நிச்சயமாக நாமே இந்த செய்தியை இறக்கி மேலும் நிச்சயமாக நாமே இதை பாதுகாப்போம் (15:9)

கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ பொய்கள் ஒருபோதும் இதற்குள் நுழைய முடியாது (41:42)

தொடக்கம் முதல் நான் கூறுவது யாதெனில், குர்ஆன் அன்றும், இன்றும் என்றுமே மிகச் சரியான முறையில் பாதுகாக்கப்பட்டே உள்ளது என்பது. கணிதக்கட்டமைப்பின் மூலம் சந்தேகமில்லாமல் மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அன்றும் உண்மையான நம்பிக்கையாளர் ஒவ்வொருவரும் உறுதியாக சரியான குர்ஆனை அறிந்தே இருந்தார்கள். இன்றும் உண்மையான நம்பிக்கையாளர்கள் அறிந்தே இருக்கிறார்கள். மேலும் என்றுமே உண்மையான நம்பிக்கையாளர்கள் சரியான குர்ஆனை நிச்சயமாக அறிவார்கள். அதாவது பொய்யான முஸ்லிம்கள் பொய்யான குர்ஆனை அறிந்து வைத்திருக்கும் அதே வேளையில் உண்மையான முஸ்லிம்கள் உண்மையான குர் ஆனை சோதித்தறிந்து உணர்ந்து கொள்வார்கள். மேலும் பொய்யான முஸ்லிம்கள் சரியான குர்ஆனை வைத்திருப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் தகுதியற்றவர்கள் ஆவர். ஏனெனில் குர்ஆ னின் 6:19, 38, 1|4, 7:146, 18 : 57ல் கடவுளின் கூற்றான. குர்ஆ னின் குறையின்மையையும். குர்ஆனின் நிறைவையும் நம்பக்கூடாது என்ற முடிவை அவர்கள் எடுத்ததே காரணம் ஆகும். மேலும் அவர்கள் மார்க்க ஆதாரமாக மற்றவைகளை அதாவது ஹதீஸ் மற்றும் சுன்னத் போன்றவைகளை பற்றிக் கொண்டு விட்டார்கள்.

இன்று உலகில் உள்ள மிகப் பெரும்பான்மையான குர்ஆன் பிரதிகள் முகம்மது நபி தம்முடைய சொந்த கரங்களில் எழுதிய மூல குர்ஆனோடு

(Original Quran) ஒத்துப்போகாது. அவை பல்வேறுவிதமான தவறுகளை வெளிப்படுத்துபவையாக உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளாக ஈரானில் அச்சிடப்பட்ட லட்சக்கணக்கான (Millions) குர்ஆன்கள் வழக்கமான அரபி மொழியைப் பயன்படுத்தி அச்சிடப்பட்டதேயன்றி கடவுளால் கட்டளையிடப்பட்ட ஒப்பற்ற நிகரில்லாத குர் ஆனிய அரபி மொழியில் அல்ல. குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தையும் பாதுகாக்க கடவுளால் உருவாக்கப்பட்ட கணிதக் கட்டமைப்பை இந்த குர்ஆன் பிரதிகள் மீறுகின்ற காரணங்களால் இந்த பிரதிகள் அனைத்துமே தவறானது. ஆனால் இவை சரியான முறையில் பாதுகாக்கப்பட்ட இறைச்சட்டமான குர்ஆனை (உண்மையான குர்ஆன்) ஒரு போதும் பாழ்படுத்தி (Nullfy) விட முடியாது. உண்மையான முஸ்லிம்கள் தொடர்ந்து உண்மையான குர்ஆனை அறிந்து கொள்வார்கள். பொய்யான முஸ்லிம்கள் தொடர்ந்து தவறான குர்ஆனையே தெரிந்து கொள்வார்கள். இதுவும் குர்ஆனில் 7:146 குறிப்பிட்டுள்ளபடி கடவுளின் சட்டமேயாகும். பெரும்பாலான வாசகர்கள் அத்தியாயம் 9ன் 128, மற்றும் 129. வசனங்களில் நபியை வெளிப்படையாகவே கடவுளுக்கு நிகராக குறிப்பிட்டுள்ளதை எப்போதும் மிகப் பெரிய தவறாகவும் மிகவும் சிரமமாக உணர்ந்ததாகவும் எழுதியுள்ளார்கள். ஏதோ தவறு நடந்திருக்கிறது என்பதை தெளிவாக உணர்ந்தவர்களாகவே அவர்களாகவே அவர்கள் நிலை இருந்தது.

### ஞானம் மிகுந்த குர் ஆன் கட்டுரையில் குறிப்பிடப்படும் வசனங்கள்

இந்தக் குர் ஆன் கடவுளைத் தவிர வேறு யாராலும் எழுதப்பட்டிருக்க முடியாது. இது முந்திய எல்லா வேதங்களையும் உறுதிப்படுத்துகின்றது, மேலும் முழுமையாக விவரிக்கப்பட்ட ஒரு வேதமாகவும் உள்ளது. இதில் தவறுகள் இல்லை; ஏனெனில் இது அகிலங்களின் அதிபதியிடமிருந்து வந்தது. (I0:37)

நம்ப மறுத்தவர்கள் கூறினர், "இந்தக் குர்ஆனைக் கேட்காதீர்கள், மேலும் அதனைச் சிதைத்து விடுங்கள், நீங்கள் வெற்றி பெறக்கூடும் (41:26)

நம்மைச் சந்திப்பதை எதிர்பார்க்காத அவர்களிடம் நம்முடைய வெளிப்பாடுகள் எடுத்துக் கூறப்பட்டால் அவர்கள் கூறுகின்றனர். “இது அல்லாத வேறு குர் ஆனைக் கொண்டு வாருங்கள் அல்லது இதனை மாற்றி விடுங்கள்!” என் விருப்பத்திற்கேற்ப நான் அதனை மாற்றி விட முடியாது. எனக்கு என்ன வெளிப்படுத்தப்படுகிறதோ அதனையே நான் பின்பற்றுகிறேன். என் இரட்சகருக்கு நான் கட்டுப்படாவிட்டால் மகத்தான அந்த |நாளின் வேதனைக்கு நான் அஞ்சுகின்றேன் (10:15)

பிரிவினையாளர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம். அவர்கள் (குர்ஆனின் ஒரு பகுதியை மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனர். (15:90-91)

# ஞானம் மிகுந்த குர்ஆன்

இக்கட்டுரையில் காணப்படும் எண்களுக்கான வசனங்கள் இதழின் 20, மற்றும் 42ஐ தொடர்ந்த பக்கங்களில் இடம்பெறுகிறது. கவனத்துடன் படித்து பயன்பெறுங்கள்.

கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என முக்காலங்களையும் நன்கறிந்த கடவுளால் இறுதியாக இறக்கப்பட்ட வேதம் அல்குர் ஆன். எனவே அதில் கடந்த காலத்தில் நடந்த நிகழ்வுகள் விவரித்துச் சொல்லப்படுகின்றன. நிகழ்காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் குர்ஆன் எடுத்துக் கூறுகின்றது. எதிர்காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள் பற்றியும் அது நம்மை எச்சரிக்கின்றது. அதில் ஏராளமான முன்னறிவிப்புக்கள் இருப்பதை சிந்தனைத் திறனைப் பயன்படுத்துபவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

அவ்விதமாக. குர்ஆனில் இரு போலி வசனங்கள் சேர்க்கப்பட்டுப் பின்னர் மெய்ப்பிக்கும் தூதரின் வருகையின் போது அது நீக்கப்பட்டு இறைவனின் இறுதி வேதம் தூய்மைப்படுத்தப்பட்டு மெய்ப்பிக்கப்படும் என்பதையும் குர்ஆன் நமக்குக் கூறுகின்றது. இதற்கு முன்னர் பல வேதங்கள் அருளப்பட்டதையும் பின்னர் அவை நிராகரிப்பாளர்களாலும் இணைவைப்பவர்களாலும் சிதைக்கப்பட்டு, மறைக்கப்பட்டதையும் நமக்குக் குர்ஆன் கற்றுத் தருகின்றது 6:91,5:48, 2:79. 35:32. 7:169. 10:37)

எனவே இறுதியாக இறக்கப்பட்ட இறைவேதத்தைத் தானே பாதுகாப்பதாக இறைவன் உறுதிமொழி கூறுகின்றார். ஆயினும், இறைவன் நாமே பாதுகாப்போம் என்று கூறுவதன் பொருள் குர்ஆனை எவரும் சிதைக்க முடியாதபடி தடுத்து விடுவோம் என்பதா?

6:112-113; 22:52-55 ஆகிய வசனங்களை நாம் ஆழ்ந்து கற்கும் போது அவ்வாறல்ல என நாம் அறிகிறோம். முஹம்மதின் சமகாலத்தவரும் முந்திய தூதர்களின் சமகாலத்தவர்களைப் போலவே, முதலில் தூதுச் செய்தியைக் கடுமையாக எதிர்த்துப் பின்னர் இறைவனின் திட்டப்படி சத்தியம் ஜெயித்தவுடன். நாங்களும் சத்தியத்தை ஏற்றுக் கொள்கிறோம் என வாயளவில் கூறிவிட்டுத் தொடர்ந்து சத்தியத்தைச் சிதைக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்களே என்பதை மேற்கண்ட இறைவசனங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. மேலும் முஹம்மதின் சமகாலத்தவராகிய அரபிகளைப் பற்றிக் கடவுள் கூறும்போது அவர்களில் மிகச் சிலரைத் தவிர பெரும்பாலோர் நயவஞ்சகர்களே என்றும் அறிவிக்கின்றார். 'இவ்வாறிருக்கையில். அரபிகள் அனைவரும் பாக்கியம் பெற்றவர்கள் என்றும் முஹம்மதை ஒரே ஒரு முறை பார்த்தவர் கூட பொய்யே சொல்ல மாட்டார் என்றும் அவர்களைக் குருட்டுத்தனமாக நம்பிக்

கொண்டிருக்கும் முஹம்மதியர்கள் குர்ஆனை முழுமையாக ஆய்ந்து பார்க்க வேண்டாமா?

மேலும் முஹம்மதின் சமகாலத்தவர்கள் முஹம்மதின் வாழ்நாளின் போதே குர்ஆனைச் சிதைக்கப் பல்வேறு வழிகளில் முயன்றனர் என்பதைக் குர்ஆன் வசனங்கள் கற்றுத் தருகின்றன. பார்க்க 41:26; 10:15-16, 15:90-91

முஹம்மத் நபியைத் திசை திருப்புவதற்காகவும் இறைவனின் வார்த்தைகளைச் சிதைப்பதற்காகவும் அன்றைய அரபியர்கள் செய்த முயற்சிகளைக் குர்ஆன் விரிவாகவே விவரிக்கின்றது. 17:73-74 கூறுவதைப் பாருங்களேன்!

'நாம் உமக்கு வெளிப்படுத்தியவற்றில் இருந்து அவர்கள் உம்மைக் கிட்டத்தட்டத் திசைதிருப்பி விட்டனர். உம்மை நெருங்கிய தோழராக எடுத்துக் கொள்ளும் பொருட்டு வேறு சிலவற்றையும் நீர் இட்டுக்கட்டிக் கூற வேண்டும் என்று விரும்பினர். 17:73

நேரடியான, மிகத்தெளிவான, இவ்வசனம் என்ன கூறுகின்றது என்பதைக் கவனித்தீர்களா? முஹம்மதுக்கு இறைவன் வெளிப்படுத்தியவற்றை விட்டு அவரைத் திசை திருப்ப அரபியர்கள் செய்த கடும் முயற்சிகளை இவ்வசனம் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. அவரை மிகவும் நெருங்கியவராக்கிக் கொள்ளும் பொருட்டு சிலவற்றை இட்டுக்கட்டிக் கூற வேண்டும் என்று முஹம்மதை அவர்கள் நிர்பந்தித்ததையும் எடுத்துக் கூறுகின்றது. அதில் அவர்கள் கிட்டத்தட்ட வெற்றி பெற்று விட்டனர் என்றும் கூறுகின்றது. அடுத்த வசனத்தில் கடவுள் கூறுவதைக் கேளுங்கள்.

"நாம் உம்மை உறுதிப்படுத்தியிருக்காவிட்டால் நீர் சிறிதளவேனும் அவர்கள் பக்கம் சாய்ந்திருக்கக் கூடும் 17:74

இவ்வசனத்தில், முஹம்மத் நபியை உறுதிப்படுத்தியிருக்காவிட்டால் அவர் சற்று அவர்கள் பால் சாய்ந்திருப்பார்கள் என்று இறைவன் கூறுவதிலிருந்து சத்தியத்தூதின் எதிர்ப்பாளர்கள் செய்த கடும் முயற்சிகளை நாம் விளங்கிக் கொள்கிறோம். இருப்பினும் இறைவனின் கருணையால் அவ்வாறு நடந்து விடாமல் அவர் பாதுகாக்கப்படுகின்றார்.

முஹம்மதின் வாழ்நாளிலேயே குர் ஆனைச் சிதைக்க இத்தனை முயற்சிகள் செய்தவர்கள் அவர் மரணத்திற்குப்பின் மட்டும் திருந்தி விட்டிருப்பார்களா என்ன? அவர்கள் தங்கள் முயற்சியைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்திருப்பார்கள் என்பது தெளிவாகின்றது அல்லவா?

அவ்வாறுதான் நடந்தது. முஹம்மதின் மரணத்திற்குப் பின் குர்ஆனைப் பிரதியெடுக்கும்போது முஹம்மதை தங்களுக்கு மிகவும் நெருங்கியவராக்கிக்

(தொடர்ச்சி 27ம் பக்கம்...)

وَقٰتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ لِلّٰهِ فَاِنِ انْتَهَوْا فَلَا عُدْوَانَ اِلَّا عَلَى الظّٰلِمِيْنَ

193. You may also fight them to eliminate oppression, and to worship God freely. If they refrain, you shall not aggress; aggression is permitted only against the aggressors.

193. அடக்குமுறையினைக் களைவதற்கும், சுதந்திரமாகக் கடவுள்-ஐ வழிபடுவதற்கும் கூட நீங்கள் அவர்களுடன் சண்டையிலாம். அவர்கள் விலகிக் கொண்டால், நீங்கள் வலுச்சண்டை செய்ய வேண்டாம், வலுச்சண்டையிடு பவர்களுக்கு எதிராக மட்டுமே ஒடுக்குமுறை அனுமதிக்கப்பட்டுள்ளது.

اَلشَّهْرُ الْحَرَامُ بِالشَّهْرِ الْحَرَامِ وَالْحُرُمٰتُ قِصَاصٌ فَمَنِ اعْتَدٰى عَلَيْكُمْ فَاعْتَدُوْا عَلَيْهِ بِمِثْلِ مَا اعْتَدٰى عَلَيْكُمْ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ

194. During the Sacred Months, aggression may be met by an equivalent response. If they attack you, you may retaliate by inflicting an equitable retribution. You shall observe God and know that God is with the righteous.

194. புனித மாதங்களின் போது, வலுச்சண்டை தனை சமமானதொரு நடவடிக்கையின் மூலம் எதிர் கொள்ளலாம். அவர்கள் உங்களைத்தாக்கினால், நியாயமானதொரு தண்டனைக்கு உட்படுத்துவதன் மூலமாகப் பழிதீர்த்துக் கொள்ளலாம். நீங்கள் கடவுள்-ஐக் கருத்தில் கொள்ள வேண்டும் மேலும் நன்னெறியாளர்களுடன் கடவுள் இருக்கின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

وَاَنْفِقُوْا فِىْ سَبِيْلِ اللّٰهِ وَلَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ
وَاَحْسِنُوْا ۛ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُحْسِنِيْنَ

195. You shall spend in the cause of God; do not throw yourselves with your own hands into destruction. You shall be charitable; God loves the charitable.

195. கடவுள்-ன் நிமித்தம் நீங்கள் செலவிட வேண்டும்; உங்களுடைய சொந்தக் கரங்களால் உங்களையே நீங்கள் நாசத்திற்குள் தள்ளிக் கொள்ளாதீர்கள், நீங்கள் பெருந்தன்மையுடன் இருக்க வேண்டும்; பெருந் தன்மையுடையவர்களைக் கடவுள் நேசிக்கின்றார்.

وَاَتِمُّوا الْحَجَّ وَالْعُمْرَةَ لِلّٰهِ فَاِنْ اُحْصِرْتُمْ فَمَا اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ وَلَا تَحْلِقُوْا رُءُوْسَكُمْ حَتّٰى يَبْلُغَ الْهَدْىُ مَحِلَّهٗ فَمَنْ كَانَ مِنْكُمْ مَّرِيْضًا اَوْ بِهٖۤ اَذًى مِّنْ رَّاْسِهٖ فَفِدْيَةٌ مِّنْ صِيَامٍ اَوْ صَدَقَةٍ اَوْ نُسُكٍ فَاِذَاۤ اَمِنْتُمْ فَمَنْ تَمَتَّعَ بِالْعُمْرَةِ اِلَى الْحَجِّ فَمَا اسْتَيْسَرَ مِنَ الْهَدْيِ فَمَنْ لَّمْ يَجِدْ فَصِيَامُ ثَلٰثَةِ اَيَّامٍ فِى الْحَجِّ وَسَبْعَةٍ اِذَا رَجَعْتُمْ تِلْكَ عَشَرَةٌ كَامِلَةٌ ذٰ لِكَ لِمَنْ لَّمْ يَكُنْ اَهْلُهٗ حَاضِرِى الْمَسْجِدِ الْحَرَامِ وَاتَّقُوا اللّٰهَ وَاعْلَمُوْۤا اَنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ

196. You shall observe the complete rites of Hajj and`Umrah for God. If you are prevented, you shall send an offering, and do not resume cutting your hair until your offering has reached its destination. If you are ill, or suffering a head injury (and you must cut your hair), you shall expiate by fasting, or giving to charity, or some other form of worship. During the normal Hajj, if you break the state of Ihraam (sanctity) between `Umrah and Hajj, you shall expiate by offering an animal sacrifice. If you cannot afford it, you shall fast three days during Hajj and seven when you return home - this completes ten - provided you do not live at the Sacred Masjid. You shall observe God, and know that God is strict in enforcing retribution.

196. ஹஜ் மற்றும் உம்ராவின் அனைத்துச் சடங்குகளையும் நீங்கள் கடவுள்-க்காகக் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் தடுத்து நிறுத்தப்பட்டால், நீங்கள் ஓர் அர்ப்பணத்தை அனுப்பி வைக்க வேண்டும், மேலும் உங்களுடைய அர்ப்பணம் அதன் சேருமிடத்தை அடைந்திடும்வரை உங்கள் முடியை மீண்டும் வெட்டிக்கொள்ளத் துவங்காதீர்கள். நீங்கள் நோயாளியாக இருந்தால், அல்லது தலையில் ஒரு காயத்தால் அவதியுற்று (மேலும் உங்கள் முடியை நீங்கள் வெட்டிக் கொள்ள வேண்டியிருந்தால்), நோன்பிருத்தல் அல்லது தர்மம் கொடுத்தல், அல்லது வேறு ஏதேனும் ஒரு வழிபாட்டு முறையினால் நீங்கள் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். சகஜமான நிலையில் ஹஜ்ஜின் காலத்தில், ஹஜ் மற்றும் உம்ராவுக்கிடையில் நீங்கள் இஹ்ராம் எனும் (புனித) நிலையை முறித்து விட்டால், ஒரு பிராணிப் பலியை அர்ப்பணிப்பதன் மூலம் நீங்கள் பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும். உங்களால் அதற்குச் செலவிட இயலாவிட்டால், ஹஜ்ஜின் காலத்தில் மூன்று நாட்கள் நோன்பிருத்தல் வேண்டும், மேலும் நீங்கள் வீடு திரும்பும் போது ஏழு - இது பத்தைப் பூர்த்தி செய்கின்றது - புனிதப் பள்ளிக்கு அருகில் நீங்கள் வசிக்காத பட்சத்தில். நீங்கள் கடவுள்-ஐக் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் தண்டனையை நிறைவேற்றுவதில் கடவுள் மிகவும் கண்டிப்பானவர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்

اَلْحَجُّ اَشْهُرٌ مَّعْلُوْمٰتٌ ۚ فَمَنْ فَرَضَ فِيْهِنَّ الْحَجَّ فَلَا رَفَثَ
وَلَا فُسُوْقَ ۙ وَلَا جِدَالَ فِى الْحَجِّ ؕ وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ
يَّعْلَمْهُ اللّٰهُ ؕ وَتَزَوَّدُوْا فَاِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوٰى
وَاتَّقُوْنِ يٰۤاُولِى الْاَلْبَابِ

*The Four Months of Hajj*

*(Zul-Hijjah, Muharram,Safar,&*

*Rabi I )*

197. Indeed, those who submit themselves absolutely to God alone, while leading a righteous life, will receive their recompense from their Lord; they have nothing to fear, nor will they grieve.

**ஹஜ்ஜின் நான்கு மாதங்கள்**

**(துல்ஹஜ் முஹர்ரம், ஸஃபர்**

**ரபிஉல் அவ்வல்)**

197. குறிப்பிடப்பட்ட மாதங்களில் ஹஜ் கடைப்பிடிக்கப் பட வேண்டும்.* ஹஜ்ஜைக் கடைப்பிடிக்கப் பயணத்தைத் துவங்குகின்ற எவரும் தாம்பத்ய உறவு, துர்நடத்தை, மற்றும் வாக்குவாதங்களை விட்டு ஹஜ்ஜின் காலம் முழுவதும் விலகியிருக்க வேண்டும். நீங்கள் செய்கின்ற நன்மைகள் எதுவாயினும், கடவுள் அது குறித்து முற்றிலும் அறிந்திருக்கின்றார். பிரயாணத்திற்கான முன்னேற்பாடுகளை நீங்கள் தயார் செய்கின்ற பொழுது, நன்னெறியே மிகச் சிறந்த முன்னேற்பாடாக உள்ளது. அறிவுத்திறன் உடையவர்களே உங்களைத்தான், நீங்கள் என்னைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(.... 22ம் பக்க தொடர்ச்சி)
கொள்ளும் பொருட்டு அவரை இறைவனுக்கு இணையாக்கி ரவூஃபுர் ரஹீம் (மிகுந்த இரக்கமுள்ளவர். நிகரற்ற அன்புடையவர்) என்றழைத்து நிகரற்ற இறைவனையே கலப்பின்றி வழிபடவேண்டும் என்ற செய்தியைப் போதித்த முஹம்மதையே இறைவனுக்கு நிகராக்கினார்கள்.

இது. இறைவன் 47:38ல் (38=19 x 2) எடுத்த உறுதிமொழிப்படி, அரபியர்கள் ஒட்டுமொத்தமாக முஹம்மதைக் கடவுளுக்கு இணையாக்கியதாலேயே நடந்தது. - ஏனெனில் கலப்பற்ற ஒருமையுடன் கடவுளை வழிபடுபவர்களுக்கு மட்டுமே சரியான குர்ஆன் கிடைக்கும். மற்ற அனைவரையும் ஒட்டு மொத்தமாக வழிகெடுக்கும் சக்தியைச் சாத்தான் பெற்றிருக்கின்றான்.

மேலும் இவ்வாறு நடக்கும் என்பதையும் பின்னர் இறைவனின் அத்தாட்சியான 19 எனும் மாபெரும் அற்புதம் அவ்விரு போலி வசனங்களையும் வெளிப்படுத்தும் என்பதையும் குர்ஆன் (13:38-39) குறிப்பிடுவதைக் காணுங்கள்.

'உமக்கு முன்னரும் நாம் தூதர்களை அனுப்பியிருக்கிறோம். மேலும் அவர்களை மனைவிகளும், குழந்தைகளையும் கொண்ட கணவர்களாக்கினோம். எந்த ஒரு தூதரும். முன்னரே நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்தில், கடவுளின் அங்கீகாரமின்றி எந்த ஒரு அற்புதத்தையும் உருவாக்க முடியாது. (13:38 38= 19 x 2)

கடவுள் தான் நாடியதை அழித்து விடுகின்றார். தான் நாடியதை உறுதிப்படுத்துகின்றார். சரியான மூலப்பிரதி அவரிடமே உள்ளது. (13:39)

பல செய்திகளைச் சொல்லும் மேற்கண்ட இரு வசனங்களில் முதலில் இறைவனின் அனுமதியின்றி எந்த ஒரு தூதரும் அற்புதங்களைக் கொண்டு வரமுடியாது என்ற முக்கியமான விஷயத்தை நாம் அறிந்து கொள்கின்றோம். உலகமே ஏற்றுக்கொண்ட மாபெரும் அற்புதமான 19ன் கணிதக் கட்டமைப்பு கடவுளின் அனுமதிப்படியே வெளிப்படுத்தப்பட்டது எனவும் புரிந்து கொள்கிறோம்.

இதற்கடுத்த வசனத்தில் இறைவன் கூறுவது என்னவென்றால் 'கடவுள் தான் நாடியதை அழித்து விடுகிறார். மேலும் தான் நாடியதை நிலைப்படுத்துகின்றார். மேலும் மிகச்சரியான மூலப்பிரதி அவரிடமே இருக்கின்றது' என்ற செய்தியாகும். இவ்விரு வசனங்களையும் இன்று நமக்குக் கிடைத்திருக்கும் உண்மைத் தகவல்களையும் இணைத்து நாம் சிந்திக்கும் போது இறைவனின் நாட்டப்படியே 9வது அத்தியாயத்தின் இறுதியில் இரு போலி வசனங்களை இணைவைப்பாளர்களால் இணைக்க முடிந்தது என்பதையும், கடவுளே

குர்ஆனைப் பாது காக்கும் பொறுப்பை ஏற்றிருக்கின்றார் என்பதால் அவர்கள் செய்த சிதைவுகளைத் தன்னுடைய அத்தாட்சியான 19ன் மாபெரும் அற்புதம் மூலம் வெளிப்படுத்தி, நீக்கித் தூய்மைப்படுத்தி இருக்கின்றார் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இறைவனின் இறுதிவேதம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை உலகம் அறிந்து கொள்வதெப்படி? முஸ்லிம்கள் மூன்று விதமாக எழுதப்பட்ட குர்ஆன் பிரதிகளை அங்கீகரித்துக் கையில் வைத்துக் கொண்டு 'ஒரு எழுத்துக் கூட மாற்றப்படாமல் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளது' என்று கூறும் பொய்யை உலகம் உற்றுக் கவனித்தால் அது பொய் என்று அறிந்து கொள்ளாதா? சிதைக்க முயற்சியே நடக்காமல் பாதுகாத்துக் கொள்வதைவிட சிதைக்கும் முயற்சி நடந்து அச்சிதைவு வெளிப்படுத்தப்பட்டுப் பின்னர் நீக்கப்படுவது என்பது மிகச் சிறந்த முழுமையான பாதுகாப்பு அல்லவா? இதன் மூலம் முழு உலகமும் கடவுளின் இறுதி வேதமான குர்ஆனை முஸ்லிம்களே சிதைக்க முயற்சி செய்தும் பாதுகாக்கப்பட்டு இருக்கின்றது என்பதை அறிந்து கொண்டு உறுதி கொள்ளும் அல்லவா? ஆம்! இன்று உலகம், கடவுளின் இறுதி வேதம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை விஞ்ஞானபூர்வமான. நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய வகையில் மிகத் தெளிவான ஆதாரங்களுடன் அறிந்து கொண்டுள்ளது.

மேலும் மெய்ப்பிக்கும் தூதரைப்பற்றி அறிவிப்பு செய்யும் 3:8|க்கு மூன்று வசனங்கள் முன்னாள் உள்ள 3:78ல் கடவுள் கூறுவதைக் கேளுங்கள்.

'அது வேதத்தில் உள்ளதுதான் என்று நீங்கள் கருத வேண்டும் என்பதற்காக, வேதத்தை ஓதுவது போல் நாக்கைச் சுழற்றி ஓதுவோர் அவர்களில் உள்ளனர். அது கடவுளிடம் இருந்து வந்தது அல்ல. அது கடவுளிடம் இருந்து வந்ததாக இல்லாத போதிலும் கடவுளிடம் இருந்து வந்ததுதான் என்று அவர்கள் கூறுகின்றனர். இவ்விதமாக, அவர்கள் அறிந்து கொண்டே கடவுளைப் பற்றிப் பொய்களைக் கூறுகின்றனர்.'

தெளிவான இவ்வசனம். மனிதர்களில் சிலர் வேதத்தில் இல்லாததை அதில் உள்ளது என்று கூறுவார்கள், ஏமாற்றுவார்கள் என்று கூறுகின்றது. படித்துப் படிப்பினைகள் பெறுவோம்.

மேற்கண்ட வசனத்தில் (3:78) இடம்பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையையும் வார்த்தைகளையும் கூட்டினால் நமக்குக் கிடைக்கும் எண்ணான 143 தான். இரு போலி வசனங்களில் (9:128-129) இடம்பெறும் எழுத்துக்களின் எண்ணிக்கையையும் வார்த்தைகளின் எண்ணிக்கையையும் கூட்டினால் நமக்குக் கிடைக்கின்றது! அதாவது. வசனம் 3:78ல் இடம்பெறும் வார்த்தைகளின் எண்ணிக்கை 27, எழுத்துக்களின் எண்ணிக்கை

116(27+I/6=143) அவ்வாறே 9:128-129ல் இடம்பெறும் வார்த்தைகளின் எண்ணிக்கை 28. எழுத்துக்களின் எண்ணிக்கை 115 (28+15=143). இது 3:78க்கும் 9:128-129க்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டுகின்றது. மகத்தான இவ்வற்புதக் குறியீடு 9:வது அத்தியாயத்தின் இறுதியில் இடம் பெற்றிருக்கும் இரு வசனங்கள் (128-129) அல்லாஹ்விடம் இருந்து வந்ததாக 'முஸ்லிம்கள்' கூறினாலும் அவை அல்லாஹ்விடம் இருந்து வந்தவை அல்ல என்பதை நமக்கு நிரூபிக்கின்றது.

மேலும் உண்மையில். 9வது அத்தியாயத்தின் இறுதியான வசனமான 9:127ல் இறைவன் கூறுவதைச் சிந்தித்துப் பாருங்கள்.

'ஏதேனும் ஓர் அத்தியாயம் (ஸுரா) இறக்கப்பட்டால், அவர்கள். 'யாரேனும் உங்களைப் பார்த்து விட்டனரா' எனக் கேட்பதைப்போல் அவர்களில் சிலர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர். பின்னர் அவர்கள் திரும்பிவிட்டனர். இவ்விதம் அவர்களுடைய இதயங்களைக் கடவுள் திசை திருப்பிவிட்டார். ஏனெனில் அவர்கள் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர்.

இவ்வசனத்தில் ஒரு சரித்திரக் குற்றம் வெளிப்படுத்தப்படுவதை குர்ஆன் முழுமையையும் கலப்பற்ற ஒருமையோடு படித்துச் சிந்திப்பவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வசனத்தில் கூறப்படுவது என்னவென்றால், குர்ஆனின் செய்தியை (கலப்பற்ற ஓரிறை வழிபாட்டுக் கொள்கையை) புரிந்து கொள்ள முடியாத காரணத்தினால் கடவுளால் திசை திருப்பப்பட்ட சிலர் ஏதேனும் ஓர் அத்தியாயம் இறக்கப்படும் போதெல்லாம் அதன் செய்தியைப் புரிந்து கொள்ளாமல் இறக்கப்படும்போது யார் யார் அங்கே இருக்கின்றனர் என்பதைக் கவனிக்கக் கூடியவர்களாக இருந்தனர் என நமக்கு அறிவிக்கின்றது. திசை திருப்பப்பட்ட அவர்கள் ஏன் அதைக் கவனிக்க வேண்டும்? என்பதை நாம் சிந்தித்தால் இதன் பின்னர் உள்ள இரு போலி வசனங்கள் இத்தகையவர்களாலேயே சேர்க்கப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். கடவுளின் இறுதி வேதம் அவரால் நிச்சயம் பாதுகாக்கப்படும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாததனால் இத்தகையதொரு செயலுக்குத் துணிந்து விட்டனர். ஆயினும் இறைவன் தன் வாக்குறுதிக்கு ஒரு போதும் மாறு செய்ய மாட்டார் என்பதால் அவர்களுடைய செயல் வெளிப்படுத்தப்பட்டு குர்ஆன் விஞ்ஞானபூர்வமாக பாதுகாக்கப்பட்டு இருப்பதை இன்று உலகம் அறிந்து கொண்டு விட்டது.

அனைத்து ஞானங்களையும் தன்னுள் அடக்கி இருக்கும் வேதங்களை அருளிய கடவுளுக்கே புகழனைத்தும் உரித்தானதாகும். ஆ-ர்

# வரலாற்றின் ஏடுகளில் சந்தேகத்துக்குரிய இரு வசனங்கள் 9:128, 129

Ahamed

சாட்சி என்பது உலகில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களுக்கும் மிக - மிக முக்கியமான ஒன்று என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

பனி மனிதனை பார்த்ததாக ஒருவர் கூறியிருக்க அவர் பார்த்ததற்கான சாட்சியாக இன்னொருவர் வேண்டும் என கூறியிருந்த ஒரு செய்தியை பத்திரிக்கையில் படித்திருக்கலாம். மேலும் ஏதேனும் கொலை நிகழ்த்தப்பட்டிருக்குமானால் நீதிமன்றங்களில் கேட்கப்படுவது சாட்சி. சாட்சி இல்லையெனில் எந்தவொன்றும் ஏற்றுக் கொள்ள முடியாததாகி விடும். நீதியாளர் என தன்னை அறிவிக்கும் அனைத்தையும் படைத்த கடவுள் தன்னைப் பற்றி. அவர் மட்டுமே கடவுளாக இருக்கின்றார் என்பதையும் அதற்குத் தானே சாட்சி பகர்வதாகவும். வானவர்களும், அறிவு பெற்றவர்களும், கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை என்றும் அவர் மிகைத்தவர். ஞானம் மிக்கவர் என்றும் சாட்சி பகர்வதாகவும் குர்ஆன் 3:18ல் காணப்படுகிறது. கடவுள், குர் ஆனில் சாட்சி விஷயமாக கூறுகையில் பொருளாதார விஷயங்கள் (2:282:283) குறித்து இரு ஆண் சாட்சிகள் வேண்டும் என்றும், இரு ஆண்கள் இல்லாத பட்சத்தில் இரு பெண்கள் மற்றும் ஒரு ஆண் என மூன்று சாட்சிகளை வலியுறுத்துகிறார். மேலும் திருமண செய்த பெண்கள் மீது அவதூறு கூறுபவர் நான்கு சாட்சிகள் கொண்டு வர வேண்டும் (24:4) எனவும், மேலும் தூதருக்கு வெளியாக்கப்பட்டவை உண்மை என உணர்ந்த காரணத்தால் அவர்களின் கண்கள் நீரால் நிரம்பியிருக்கும் எனக்கூறி. மேலும் அவர்கள் கூறுவார்கள் எங்கள் ஐயா, நாங்கள் நம்பினோம். ஆகையால் சாட்சியாளர்களுடன் எங்களை பதிவு செய்வீராக (5:83) என பன்மையில் குறிப்பிடுகிறார்.

இவ்விதமாக சாட்சி என்பது நம் வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குர்ஆனின் அனைத்து வசனங்களும் ஒன்றுக்கும் அதிகமான சாட்சிகளை கொண்டு பதிவு செய்யப்படுவதாகவும் ஆனால் அதே சமயம் நாம், கடவுளால் வெளித்தள்ளப்படும் இவ்விரு வசனங்கள் ஒரு சாட்சியை கொண்டு பதிவு செய்யப்பட்டிருப்பதாக வரலாற்று சான்றுகளில் காணக்கிடைக்கின்றன. ஏன்

இந்த முரண்பாடு? அதுவும் குறிப்பாக நாம் குறிப்பிடும் 9:128:129 ஆகிய இரு வசனங்கள் மட்டுமே ஒரு சாட்சியுடன் பதிவு செய்யப்பட்டிருக்கிறது!

குர்ஆன் இரு சாட்சிகளை கடமையாக்கியிருக்க அந்தக் குர்ஆனை பதிவு செய்வதற்கே ஒரு சாட்சி மட்டுமே இருந்திருக்கின்றது கண்டு உள்ளம் திடுக்குறுகிறது. வெகு லாவகமாக, ஒரு சாட்சியுடன் பதியப்பட்ட இருவசனங்கள் மோசடித்தனமாக உள் நுழைக்கப்பட்ட விதத்தை நாம் கவனித்தோமானால் ஒருமிகப்பெரிய குற்றம் சர்வசாதாரணமாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது கண்டு அதிர்ச்சியுறுகிறோம்.

ஆனால் சர்வ வல்லமையுடைய கடவுள் இந்நயவஞ்சகர்களை நம்பிக்கையாளர்களுக்கு அவர்கள் செயல்கள் மூலமாகவே அடையாளம் காட்டுகிறார். அவர்களின் சூழ்ச்சி அவர்களையே சூழ்ந்து கொள்ளும் (35:43) என்ற இறை வசனத்திற்கேற்ப. அவர்களையே அவர்களின் புனைந்துரைகளுக்கு சாட்சிகளாக ஆக்கிய கடவுள் வல்லமை மிகக்கொண்ட ரோஷக்காரர் அல்லவா.

வேதத்திற்கு நிகராகக் கருதும். ஆம்! அவர்கள் வேதத்திற்கு நிகராகக் கருதும் ஹதீஸ்களிலேயே அவர்கள் விட்டுச் சென்ற ஆதாரங்களைப் பார்ப்போம்.

ஆரம்ப காலந்தொட்டே இவ்விரு வசனங்கள் சந்தேகத்துக்குரியதாகவே கண்டறியப்பட்டு வருகிறது. எவ்விதமெனில் நபியின் கரங்களால் எழுதப்பட்டு குறிப்புகள் கொடுக்கப்பட்ட-இறக்கப்பட்ட வரிசையில் அமைந்த - குர்ஆன் கலீஃபா உதுமான் காலத்தில் இப்பொழுது உள்ள நிலையில் தொகுக்கப்பட்ட போது நிகழ்ந்த நிகழ்வுகளில். அலீயிடம் கேட்கப்பட்டதாக ஜலாலுத்தீன் அல் ஸயுத்தி எழுதிய அல் இத்கான் பீ உலூமுல் குர்ஆன். அல், அஸ்ஹரியா பிரஸ் கெய்ரோ 1318 கி.பி. பக்கம் 59ல் வெளியிடப்படும் விஷயம் என்ன வென்றால்,

அலீ ஏன் வெளியில் வருவதில்லை எனக் கேட்கப்பட. குர்ஆனில் பிற்சேர்க்கை சேர்க்கப்பட்டுள்ளது. மீண்டும் அது (குர்ஆன்) சரி செய்யப்படும் வரையில் நான் என் வெளிச்செல்லும் ஆடையை அணிய மாட்டேன் என சபதம் எடுத்துள்ளதாக கூறுகிறார்.

மேலும் தமிழில் "பெருமானாரின் பொன்மொழிப் பேழை -இரண்டாம் பாகம்" என்ற புத்தகம் யுனிவர்ஷல் பப்ளிஷர்ஸ் அண்டு புக் செல்லர்ஸ். 25. அங்கப்பன் தெரு. சென்னை - 1 ல் வெளியிடப்பட்டது.

மேற்கண்ட புத்தகத்தில் 1897 மற்றும் 1898 ஆம் எண்ணிட்ட இரு அறிவிப்புகளை (அறிவிப்பாளர் முறையே ஜைத் இப்னு சாபித் புகாரி, திர்மிதீ. ஜீஹ்ரி. புகாரி திர்மீதி) இங்கு சான்றாக பிரசுரம் செய்கிறோம்.

தமிழில் வெளியிடப்பட்ட "பெருமானாரின் பொன் மொழிப் பேழை- இரண்டாம் பாகம்" புத்தகத்தின் நகல். (பக்கம் 798, 799)



789

ஜைத் பின் ஜாபித்(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். யமாமா யுத்தத்திற்குப் பின்பு அபூபக்ர்(ரலி) என்னை கூப்பிட்டு ஆள் அனுப்பினார்கள். நான் அவர்களிடம் சென்ற போது அவர்களோடு உமர்(ரலி) அவர்களும் இருந்தார்கள். அப்போது அபூபக்ர்(ரலி) அவர்கள் கூறினார்கள். யமாமா யுத்தத்தில் குர்ஆனை மனனம் செய்த காரீகள் அதிகமாக கொல்லப்பட்டு விட்டனர். வேறு போர்களில் இன்னும் அதிக காரீகள் கொல்லப்படலாம் என்று நான் அஞ்சுகிறேன். அப்படி நடந்தால் குர்ஆனின் பல பகுதிகள் இல்லாமல் போய்விடும். ஆகவே குர்ஆன் முழுமையாக(ஒரே ஏட்டில்)ஒன்று திரட்டப்படுவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன் என உமர் என்னிடம் வந்து கூறினார். அதற்கு நான் உமரிடம், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் செய்யாத ஒன்றை நாம் எப்படிச் செய்வதென்றேன், அதற்கு உமர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக இது நல்ல செயல்தான் என்று கூறி என்னிடம் இது பற்றி திரும்பத்திரும்ப பேசியபின் அல்லாஹ் என் மனதில் அது பற்றிய தெளிவை ஏற்படுத்தினான். உமரின் கருத்தை நான் சரியென கருதுகிறேன். [இவ்வாறு அபூபக்ர்(ரலி) அவர்களுக்கும் உமர்(ரலி) அவர்களுக்கும் நடந்த உரையாடலை ஸஜத்(ரலி) அவர்களிடம் அபூபக்ர்(ரலி) அவர்கள் கூறினார்கள்].ஜைத்(ரலி) தொடர்ந்து கூறுகிறார்கள்: அபூபக்ர் தொடர்ந்து என்னைப்பார்த்து, நீங்கள் விவரமான இளைஞர் நபி(ஸல்) அவர்களுக்கு வஹியை எழுதுபவராக இருந்திருக்கிறீர்கள் உங்களை நாங்கள் சந்தேகிக்கவில்லை. குர்ஆனை பலரிடமிருந்து பெற்று ஒன்று சேருங்கள் என்றார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக மலைகளில் ஒரு மலையை நகர்த்தும் படி அவர்கள் என்னைப் பணித்திருந்தால் குர்ஆனை ஒன்று சேர்க்கும் படி இட்ட கட்டளையை விட கனமானதாக இருந்திருக்காது. அப்போது நான் (அபூபக்ர், உமர் இருவரையும் நோக்கி) அல்லாஹ்வின் தூதர் செய்யாத ஒன்றை நீங்கள் இருவரும் எப்படிச் செய்யலாம்? என்றேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக இது நல்ல செயல்தான் என்று கூறி அபூபக்ர் என்னிடம் திரும்பத்திரும்ப பேசினார்கள்.

ஆதாரம் : -
புகாரீ, திர்மிதீ. 1897

இருவரும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் செய்யாத அலுவலை எவ்வாறு செய்யத் துணிந்தீர்கள்?' என்று வினவினேன். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், 'இறைவன் மீது ஆணையாக, இது மிகவும் மேலான செயலாகும்' என்று பன்முறை என்னிடம் எடுத்துரைத்து இது பற்றி இறைவன் அவர்களின் உள்ளத்தைத் திறந்தவண்ணம் என்னுடைய உள்ளத்தையும் திறந்துவிடும் வரை என்னைத் தூண்டினர். ஆகவே, நான், குர்ஆனைத் தேடும் பணியில் | ஈடுபட்டு (அதன் வசனங்களை) பட்டை எலும்புகளிலும் பேரீச்ச ஓலைகளிலும் மிருதுவான கற்களிலும் மனிதர்களின் மனத்திலுமிருந்தும் சேகரித்து ஒன்று சேர்த்தேன். 9-ஆவது அத்தியாயத்தின் இறுதிப் பகுதியை குஸைமாவிடமிருந்தோ , அல்லது அபூ குஸைமாவிடமிருந்தோ பெற்றேன். வேறு எவரிடமும் நான் அதனைக் காணவில்லை. அபூ பக்ர் (ரலி) அவர்கள் இறக்கும்வரை நான் சேகரம் செய்த குர்ஆன் அவர்களிடமே இருந்து வந்தது. (பின்னர் அது உமர் (ரலி) அவர்களிடம் அவர்கள் இறக்கும் வரை இருந்து வந்தது. அதன்பின் அது உமர் (ரலி) அவர்களின் மகளும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மனைவி யுமான ஹஃப்ஸா (ரலி) அவர் களிடம் இருந்து வந்தது.)"

அறிவிப்பவர் : ஜைதுப்னு ஸாபித் (ரலி)

மொழியில்தான் அருளப் பெற்றது' என்று கூறினர். எனவே அவர்களும் அவ்விதமே பல பிரதிகள் எழுதினர். உத்மான் (ரலி) அவர்கள் அவற்றில் ஒவ்வோர் பிரதியை ஒவ்வோர் பகுதிக்குமாய்ப் பற்பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்து ஆங்கிருந்த அஃதல்லாத (அரைகுறைப்) பிரதிகளை எரித்து(ச் சாம்பலாக்கி) விடுமாறு கட்டளையிட்டனர். அண்ண ல் நபி (ஸல்) அவர்கள் ஓத நான் கேட்ட ஒரு வசனம் எனக்குக் கிடைக்கவில்லை. எனவே நான் அதனைத் தேடி அலைந்தேன். இறுதியாக அது குஸைமா இப்னு தாபித் அன்ஸாரியிடம் கிடைத்தது. இந்தக் குஸை மாவின் சாட்சியை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இருவரு டைய சாட்சிக்குச் சமமாக்கியிருந்தனர். ஆகவே (அவர் கூறிய) 33 : 23-ஆவது - வசனத்தை எல்லாப் பிரதிகளிலம் 33-ஆவது அத்தியாயத்தில் குறிப்பட்டு விட்டோம்' என்று ஜைதுபனு ஸாபித் (ரலி) அவர்கள் கூறினர் என அனஸ் பாலி அவாகள் வாயிலாக நான் அறியலானேன."

அறிவிப்பவர் : ஜுஹ்ரி

ஆதாரம் : புகாரி, திர்மிதீ. 1898

[அப்பொழுது அவர்கள் 12 : 248-ஆவது வசனத்தில் உள்ள 'தாபூத்' என்ற சொல் பற்றிச் சச்சரவிட்டுக் கொண்டனர். ஜைதுப்னு ஸாபித்

இதில் குறிப்பாக 9வது அத்தியாயத்தின் இறுதிப்பகுதியே சுட்டிக்காட்டப்படுகிறது என்பதை உற்றுக் கவனிக்கவும். இன்னும் இதில் சாட்சியாகவும் குஸைமா இப்னு தாபித் என்னும் ஒருவரே இடம் பெறுகிறார். அவர் இரு சாட்சிக்கு சமம் என்பதாக நபி அறிவித்தார் என்பதாகவும் கதை கட்டி விட்டிருக்கிறார்கள்.

குஸைமாவின் சாட்சி இரு சாட்சிக்குச் சமம் என்று நபி கூறினார்கள் என்று அறிவித்தவருக்கு மற்றொரு சாட்சி இல்லை என்பது கவனத்திற்குரிய விஷயம்.

மேலும் இச்சாட்சியில் குஸைமா இப்னு தாபித் அல் அன்சாரி எனும் நபர் இடம் பெறுகிறார். இவர் மதீனாவில் வாழ்ந்த கடைசி கால நபித் தோழர் என ஹதீஸ்களில் அறிவிக்கப்படுகிறது. கவனிக்க,

இவ்விரு போலி வசனங்கள் மக்காவில் இறக்கப்பட்டதாக கூறப்படும்பொழுது மதினாவில் கடைசிக்காலத்தில் இஸ்லாத்தில் சேர்ந்த நபரிடம் எவ்விதம் இவ்வசனம் இருந்திருக்க முடியும்? இதுவும் சந்தேகத்தின் கோடுகளை இன்னும் இறுகச் செய்கிறது.


மேலும் குர்ஆனின் மிகப்பழைய பிரதிகளில் ஒன்று இஸ்தான்புல்லில் உள்ள சுலைமானியா நூலகத்தில் காணப்படுகிறது.

மான் தோலில் கூஃபி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இது அலீ இப்னு அபீதாலிப்பின் பிரத்யேக பிரதி என அறிவிக்கப்படுகிறது. அப்புத்தகம் *Faith 18" என்ற எண்ணில் காணப்படுகிறது. அதில் 9வது அத்தியாயம் காணப்படுகிறது. ஆயினும் அவ்வத்தியாயத்தின் கடைசி மூன்று பக்கங்கள் நம் கவனத்தை கவரும் வகையில் கிழிக்கப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு பக்கம் கிழிக்கப்பட்டிருப்பின் நாம் விஷயத்தை கிரகித்துக் கொள்ளக்கூடும் எனக் கருதி குற்றவாளிகள் மூன்று பக்கங்களை கிழித்திருக்கின்றனர். இதை நீங்கள் இஸ்தான்புல்லுக்கு சென்றால் காணலாம்.

இத்தனை சரித்திர ஆதாரங்கள் இருப்பினும் இவை அனைத்தும் அவ்விரு வசனங்கள் போலியானவை என்பதற்கான முழுமுதல் ஆதாரங்கள் அல்ல. உண்மையில் கடவுளின் அற்புத அத்தாட்சியான 19எனும் கணிதக் குறியீட்டின் மூலம்தான் இவ்விரு போலி வசனங்களும் மிகத் தெளிவாக, மறுக்க முடியாத விதமாக வெளிப்படுத்தி அடையாளம் காட்டப்படுகின்றன.

# தூங்கி கொண்டிருக்கும் மானிட சமூகம்

இன்று மனிதர்கள் உலகத்தில் நடக்கும் அத்தனை தவறுகளையும் சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றனர். இன்னும் கூறினால் தவறுகளுக்கும், பாவங்களுக்கும் நியாயம் கற்பிக்கின்றனர். உண்மையில் இது அவர்களின் அறியாமையையும், நம்பிக்கையற்ற தன்மையையும் தான் வெளிப்படுத்துகிறது. தங்களை கடவுளுக்கு வழிபட்டவர்கள் (முஸ்லிம்கள்) என்று சொல்பவர்கள் கூட உலகில் நடக்கும் அநீதிகளை கண்டும் காணாமல் கண்களை இறுக மூடிக் கொள்கிறார்கள். உதாரணமாக உலகத்திலேயே பணக்கார நாடான சவூதியில் அரபியர்கள் தாங்கள் தான் கடவுளுக்கு பிரியமானவர்கள். உலகத்தில் உள்ள எல்லா முஸ்லிம்களும் அல்லாஹ்வை வழிபடும் எங்கள் சகோதரர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனர். அவர்களுக்கு அருகில் உள்ள நாடான எத்தியோப்பியாவோ மிகவும் வறுமையில் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறது. தினமும் பல எத்தியோப்பிய முஸ்லிம்கள் பசியால் உணவு இல்லாமல் இறந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் பணக்கார அரபியர்கள்


படஉதவி: அனந்த விகடன்

அவர்களை தங்கள் சகோதரர்கள் என்று சொல்லிக் கொண்டு இருந்தாலும் அதனைக் கண்டும் காணாமலும் ஆடம்பரமாக, உல்லாசமாக கடவுள் கொடுத்த அருட்கொடையை தங்கத்தில் பைவ் ஸ்டார் ஹோட்டல் கட்டி அற்ப மாய உலக இன்பம் தேடி வீண் விரயம் செய்து பெருமை அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடவுள் கூறுகிறார் :

அன்றியும் நெருப்பின் முன் நிராகரிப்பவர்கள் கொண்டு வரப்படும் நாளில், உங்கள் உலக வாழ்க்கையின்போது உங்களுக்கு கிடைத்திருந்த நல்ல பொருள்களையெல்லாம் வீண் செலவு செய்து (உலக) மாய இன்பம் தேடினீர்கள். ஆகவே நீங்கள் பூமியில் அநியாயமாக பெருமையடித்துக் கொண்டும் வரம்பு மீறி (வாழ்ந்து) கொண்டும் இருந்த காரணத்தால். இழிவு தரும் வேதனையை இன்று நீங்கள் கூலியாகக் கொடுக்கப்படுகிறீர்கள். அல்குர் ஆன் 46:20

இந்த செல்வச் செருக்கு பிடித்த அரபியர்கள் கடவுளிடம் எவ்வாறு கணக்கு சொல்லப்போகிறார்கள்? ஒவ்வொரு தனி மனிதனும் கடவுளிடம் பதில் சொல்ல வேண்டும். உனக்கு கண்கள். காதுகள். இருதயம். கை. கால்கள் மற்றும் வல்லமை ஆகியவற்றைக் கொடுத்தேனே உன் பங்கிற்கு நீ என்ன செய்தாய் என்று கடவுள் கேட்க மாட்டாரா? கடவுள் கணக்கு வாங்குவதில் மிகவும் விரைவானவர்.

மேலும் உங்களுக்கு அளிக்கப்பட்ட அருட்கொடைகளைப் பற்றி நீங்கள் வினவப்படுவீர்கள்.

இலக்கியங்களில் பாரதி கூறுகிறான் :-
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை (உலகம்) அழித்திடுவோம்

வேதத்தில் கடவுள் கூறுகிறார் :-
எவரொருவர் ஓராத்மாவை
வாழ வைக்கிறாரோ அவர்
உலக மக்கள் யாவரையும்
வாழ வைப்பவரைப் போலாவார்
- அல்குர்ஆன் 5:32

ஆனால் ஒருவரோ. ஒரு குடும்பமோ. ஒரு ஊரோ மட்டுமல்ல பற்பல நாடுகள் உணவு இல்லாமல் பசியால் மடிந்து கொண்டிருக்கிறது.

ஒரு டிவி சேனலில் செய்தி வாசிப்பவர் ஆப்பிரிக்காவில் காங்கோ என்ற ஊரில் இருபத்தைந்து லட்சம் மக்கள் பட்டினியால் இறந்து விட்டார்கள் என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு உடனே அடுத்த வரியில்

உல்லாசமாக விருந்து சாப்பிட்டு ஆடம்பர வாழ்க்கை நடத்துபவர்களை படம் பிடித்துக் காட்டி வெட்கமில்லாமல் விமர்சிக்கிறார்.

அந்த செய்தியை சொல்பவர்க்கும் வெட்கமில்லை. அதைப் பார்க்கும் நாமும் நம்மை மனித இனம் என்று சொல்லிக் கொண்டு இயற்கையில் உள்ள இரக்க தன்மை கூட இல்லாமல் தங்களையே மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நான் நன்றாக வாழ்ந்தால் போதும், உலகம் முழுவதும் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என்ற கேவலமான சுயநலம் கொண்டிருக்கின்றனர். அது அவர்களுடைய விதி. அவர்களையெல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார் என்றும் கடவுள் தான் அதற்குக் காரணம் என்றும் சொல்கின்றனர்.

குர்ஆன் கூறுகின்றது : கடவுளின் கை கட்டப்பட்டிருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்; அவர்களுடைய கைகள் தான் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியதின் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டார்கள் அவருடைய கைகளோ விரிக்கப்பட்டே இருக்கின்றன.

அல்குர்ஆன் 5:64

தனக்கு ஒரு பிரச்சனையென்றால் மனிதன் முனைந்து உழைக்கிறான். அதில் கடவுள் நாட்டம் என்று சும்மா இருப்பதில்லை. முயற்சி செய்து உழைக்கிறான். இந்த வெற்றிக்கு நான்தான் காரணம் என்றும் பெருமை பேசுகிறான். கடவுள் யாருக்கும் அநியாயம் செய்வதில்லை. ஆனால் அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொள்கிறார்கள். கடவுள் உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வளத்தை வைத்திருக்கிறார். உதாரணமாக நாம் வசித்துக் கொண்டிருக்கும் இந்தியாவில் மலைகள் அதிகமாக இருக்கின்றன அதன் காரணமாக நீர் வளம் மிக அதிகமாக இருக்கின்றது. இங்கு கிடைக்கும் தண்ணீரை கொண்டு முழு உலகத்திற்கும் தாகம் தணிக்கலாம். ஆனால் இங்கு உள்ள ஊர்களுக்கே தண்ணீர் இல்லை. இதற்கு காரணம் கடவுளா? இல்லவே இல்லை. பருவ மழையே பெய்யாவிட்டாலும் வற்றாமல் நீர் தரும் ஆறுகள் இருக்கின்றன. ஆனால் அவை விரயமாகின்றன. இதற்கு கடவுளா காரணம்?

கடவுள் அகிலத்தாருக்கு அநீதி இழைக்க நாடமாட்டார். மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே அநீதம் செய்து கொள்கின்றனர்.

ஆதலால் வெளிப்பார்வைக்கு விழித்துக் கொண்டும் உண்மையில் தூங்கிக் கொண்டிருக்கும் மானிட சமூகமே! அநீதி நடு நடுங்க விழித்தெழு. செவ்வாய் கிரகத்தில் உயிர்கள் வாழ முடியுமா என்று பல கோடி செலவு செய்து ராக்கெட் அனுப்பி பெருமை அடிக்காமல் நாம் வசிக்கும் பூமியில் செலவு செய்து உயிர்களை வாழ வைத்து உண்மையான பெருமையை கடவுளிடம் பெறுவோமாக.

# நம்பிசெயல்பட வேண்டியது சத்திய வார்த்தைகளையா?
# (அல்லது) அசத்திய வாக்குமூலங்களையா?

அபூ.ஆரிஃபா

| கடவுள் வெளிப்படுத்தும் சத்திய வாக்குமூலங்கள் | மறுப்பவர்கள் வெளிப்படுத்தும் அசத்திய வாக்குபலங்கள் |
|---|---|
| 1. திருக்குர் ஆன் தெளிவானது. முழுமையானது (எதுவும் விட்டு விடப்படவில்லை) விவரிக்கப் பட்டது என்று இறைவன் கூறுகிறார். (l2:111) | 1. திருக்குர் ஆன் தெளயாக இல்லை, விளக்கமாக இல்லை, ஒவ்வொன் றையும் விவரிக் கவில்லை என்று மறுப்பவர்கள் கூறுகிறார்கள். |
| 2. (திருக்குர் ஆன்) அல்லாஹ்வின் வசனங்கள் தான் உண்மையான ஹதீஸ் (மார்க்க ஆதாரம்) என்று இறைவன் கூறுகிறார். (45:6) | 2. முகம்மது நபியின் (மீது இட்டுக் கட்டப்பட்ட பொய்யான) ஹதீஸ்கள்தான் மார்க்க ஆதாரம். அதைத்தான் பின்பற்ற வேண்டும் என்று இவர்கள் கூறுகிறார்கள். |
| 3. முஹம்மது நபிதான் இறுதி நபி என்று இறைவன் கூறுகிறார். (33:40) | 3. ஈசா நபி திரும்பி வருவார் என்று விசுவாசித்து முஹம்மது நபி இறுதி நபி என்ற உண்மையை மறைத்து ஈசா நபியை இறுதி நபியாக ஏற்றுக் கொண்டார்கள். |
| 4. அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தை தான் சரியான சாட்சி பிரமாணம் என்று இறைவன் கூறுகிறார். (3:18) | 4. அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற வாக்குமூலம் தான் சரியான சாட்சி பிரமாணமாக இவர்கள் கூறுகிறார்கள். |
| 5. தொழுகையில் அல்லாஹ்வை மட்டும்தான் நினைவு கூற வேண்டும் என்று இறைவன் கூறுகிறார். (72:18. 20:14) | 5. தொழுகையில் அல்லாஹ்வுடன் முஹம்மது நபியை நினைவு கூறாவிட்டால் தொழுகை செல்லாது என்று Certify பண்ணுகிறார்கள் இவர்கள். |
| 6. சிபாரிசுகள் அனைத்தும் இறைவனிடமே என்று கடவுள் கூறுகின்றார்.(39:43,44) | 6. மறுமைநாளில் சிபாரிசு செய்யும் உரிமை முஹம்மது நபிக்கு உண்டு என்று அல்லாஹ் கூறாததை எல்லாம் குறிப்பிட்டு கூறுகிறார்கள். |

7. லா இலாஹ இல்லல்லாஹ் என்ற வாக்கியம் மட்டுமே பரிசுத்த வாக்கியம் என்று அல்லாஹ் கூறுகிறார். (22:24)

8. வேதம் அருளப்படாத புற சமயத்தை சார்ந்தவர் (உம்மீ) முஹம்மது என்று அல்லாஹ் கூறுகிறார். (7:157)

9. பாவிகள் என்றென்றும் நரகத்தில் தங்கியிருப்பார்கள் என்று கடவுள் கூறுகிறார். (3:116)

10. மிகப் பெரிய அற்புதமாக 19-ஐ பற்றி அல்லாஹ் கூறுகிறார்.(74:35)

1 1 . வானங்களுக்கும் பூமிக்கும் தானே பேரொளியாக இருப்பதாக கடவுள் கூறுகிறார். (24:35)

12. அளவற்ற கிருபையும் அளவற்ற கருணையும் உடையவர் என்று தன்னைப் பற்றி அல்லாஹ் கூறுகிறார். (24:20) (50:10)

13. இப்றாஹிம். இஸ்மாயில், மூஸா, ஈஸா போன்ற நபிமார்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் தொடர்புத் தொழுகையை நிலைநாட்டி வந்ததாக அல்லாஹ் கூறுகிறார்.

7. லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதாக இவர்கள் கூறுகிறார்கள்.

8. அந்த உம்மீ என்ற வார்த்தைக்கு முஹம்மது நபிக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்று இவர்கள் பொருள் கூறுகிறார்கள்.

9. பாவிகளில் முஹம்மது நபியின் சமூகத்தினருக்கு மட்டும் விதிவிலக்கு ஏற்படுத்தி நரகத்தில் தங்கியிருந்தாலும் முஹம்மது நபியின் சிபாரிசால் மீண்டும் சுவர்க்கம் செல்வார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

10. சாத்தானின் கணிதக் குறியீடுதான் 19 என்று இவர்கள் கூறுகிறார்கள்.

11. மகத்துவம் வாய்ந்த அல்லாஹ்வின் அரியாசனத்துக்கே முஹம்மது நபிதான் ஒளியாக இருக்கிறார் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

12. விசுவாசிகள் மீது முஹம்மது நபி அளவற்ற கிருபையும் அளவற்ற கருணையும் உடையவர் என்ற வசனத்தை இவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள். (9:128.129)

13. கடவுளுக்கே தனது உம்மத்துக்களின் இயலாமையை அறிவித்து 50 வேளை தொழுகையை படிப்படியாக வாதாடி 5 வேளைத் தொழுகையாக பெற்று வந்தவர் முஹம்மது நபி என்று இவர்கள் கூறுகிறார்கள்.

# நேர்வழி காட்டுகிறவர் வேதங்களை அருளிய கடவுள் ஒருவரே.

அபூ.ஆரீஃபா

சத்தியத்தை ஏற்று அதன்படி நடக்க வேண்டும் என்ற ஆர்வமுடையவர்கள் யாராக இருந்தாலும் உண்மையை உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் அவர்களிடம் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க வாய்ப்பு இருக்க முடியாது.

உல(க) மாக்களாக இருந்தாலும். அறிஞர்களாக இருந்தாலும். அறிந்தவர்கள் என்று நினைக்கப்படக்கூடியவர்களாக இருந்தாலும் அல்லது அறியாதவர்கள் என்று நினைக்கப்படக் கூடியவர்களாக இருந்தாலும் அவர்கள் சொல்வதையெல்லாம். கருத்துகளை எல்லாம் கேட்பதிலும் படிப்பதிலும் தவறு ஏதும் இருக்கப் போவதில்லை.

ஆனால் அவர்களின் கூற்றில் எந்த அளவுக்கு மெய்ப்பொருள் இருக்கிறது என்பதை காண வேண்டும். மேலும் சிந்தித்து உணர்ந்து அவர்கள் சொல்வதில் சரி என்று கண்டதையோ அல்லது தவறு என்று கண்டதையோ குர்ஆனின் கருத்துக்களோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். உண்மையாக இருந்தால் மட்டுமே அதனை புத்திசாலிகள் ஏற்று செயல்படுவார்கள்.

ஆனால் இதற்கு மாறாக தம்மிடம் உள்ள கவர்ச்சிகரமான பேச்சாற்றலை பயன்படுத்தி தனது பணிக்காக நல்ல சம்பளத்தையும் பேரும் புகழும் பெற்றுக் கொண்டு வலம் வரும் மார்க்க அறிஞர்களையோ. ஷெய்குமார்களை. தலைவர்களை அல்லது மகான்களைப் போல காட்சி அளிப்பவர்களையோ நேர்வழிகாட்டுபவர்கள் என்று முடிவெடுத்து அவர்களை அணுகினால்தான் இறைவன் காட்டும் நேர்வழியை தெரிந்து கொள்ள முடியும் என்று ஏதோ இறைவன் சட்டம் விதித்து இருப்பதைப் போல இன்றைக்கு பெரும்பான்மையானவர்கள் உறுதியான கற்பனையில் மிதந்து கொண்டு இருக்கிறார்கள்.

அதனால்தான் இவர்கள். தங்களால் நேசிக்கப்படும் அறிஞர்கள் இறைவனுக்கும், தூதருக்கும். தூதுச் செய்திக்கும் ஒருபோதும் எதிராக இருக்கவே

மாட்டார்கள் என்று முடிவெடுத்து அவர்கள் சொல்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கும். அதைப்பற்றி ஆராய வேண்டிய அவசியம் இல்லை என்று செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலும் தாங்கள் ஏற்றுக் கொண்டு இருக்கும் வழிகாட்டிகளுக்காக கண்மூடித்தன மாக வாதாடுபவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே இவர்களைப் பற்றி நாம் வருந்துவதில் பிரயோஜனம் ஏதும் இல்லை.

மறுமையில் இவர்கள் சந்திக்கும் பரிதாபநிலையை இறைவன் எடுத்துக் காட்டும்பொழுது "நாம் உங்களை முதன் முறையில் படைத்தது போன்றே (எல்லாவற்றையும் விட்டுவிட்டு எதுவுமில்லாமல்) தன்னந்தனியே நம்மிடம் வந்துவிட்டீர்கள். இன்னும் நாம் உங்களுக்கு அளித்தவற்றையெல்லாம் உங்கள் முதுகுகளுக்கு பின்னால் விட்டு வந்துவிட்டீர்கள். எவர்களை நீங்கள் உங்கள் கூட்டாளிகள் என்று எண்ணி கொண்டிருந்தீர்களோ உங்களுக்கு பரிந்து பேசுவார்கள் (என்று எண்ணிக் கொண்டிருந்தீர்களோ) அவர்கள் உங்களுடன் இருப்பதை நாம் காணவில்லை. உங்களுக்கு இடையே உள்ள உறவு முறிந்து விட்டது. உங்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் தவறிவிட்டன" (6:94) என்று கூறி நினைவூட்டுகிறார்.

எனவே ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் பிறக்கும் போது தனித்தவராகத்தான் பிறக்கிறார்கள். அவரது துணைக்கோ உதவிக்கோ யாரும் உடன் பிறப்பதில்லை என்பதையும் அதைப் போல ஒவ்வொருவரும் மரணிக்கும் போதும் அனைத்தையும் விட்டுவிட்டு தனித்தவராகத்தான் மரணிக்கிறார். அவருக்காக அவரது துணைக்கோ உதவிக்கோ யாரும் அவருடன் மரணிப்பதில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இதுதான் இறைவனின் நியதி என்பதை சத்திய சீலர்கள் அறிவதோடு மட்டும் அல்லாமல் ஒவ்வொருவரும் தனித்தவராகத்தான் இறைவன் முன் கேள்வி கணக்கிற்காக நிற்கப் போகிறோம் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ப தங்களை தயார் படுத்திக் கொள்வதில் உறுதியாகவும் தெளிவாகவும் முனைப்போடும் செயல்படுவார்கள்.

மானுட சமுதாயத்தின் அந்தரங்க மற்றும் பகிரங்க எதிரியான சாத்தான் மானுடனின் உள்ளத்தில் எழக்கூடிய எண்ண ஓட்டங்களையும் அறிந்து இடைமறிக்கும் ஆற்றலால் அவனது கண்ணோட்டத்தை உள்ளத்தில் போடக்கூடியவனாக இருக்கின்றான். (22:52) என்பதை அறிந்து இறையருளால் விழிப்புணர்வோடு எதிர்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள்.

அதுமட்டும் அல்லாமல் சாத்தான் ஏன் மானுட இனத்தின் பரம எதிரியாக நிரந்தர எதிரியாக மாறினான் என்பதையும் குர் ஆனைக் கொண்டு விளங்கிக் கொள்வார்கள்.

கடவுளின் படைப்பில் தானும் ஒரு படைப்பு என்பதை சாத்தான் அறிந்து இருந்தும் கடவுளின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற நியதியை விட்டுவிட்டு தனது அந்தஸ்தை உயர்வாக மதிப்பிட்டு தற்பெருமையும் ஆணவமும் கொண்டான்.

முக்கியமாக கடவுளால் பெற்ற ஞானத்தை கொண்டு அவருக்கு கீழ்ப்படியாமல் கடவுள் தன்மைகள் தன்னிடமும் வந்துவிட்டன என்ற எண்ணத்தையும் சாத்தான் வளர்த்துக் கொண்டதால் கடவுள் அவனை தண்டிக்க விரும்பினார்.

இதற்காக மண்ணால் (மண்ணின் தன்மையால்) மானுடனை படைத்து நெருப்பால் (நெருப்பின் தன்மையால்) ஏற்கனவே படைக்கப்பட்டு இருந்த சாத்தானை நோக்கி, மானுடனுக்கு கீழ்ப்படிந்து சேவை செய்ய வேண்டும் என்று கடவுள் கட்டளையிடுகிறார்.

ஆனால் இறைக்கட்டளையை சாத்தான் தனது ஆணவத்தின் காரணமாக ஏற்க மறுத்துவிட்டதால் இறைக்கோபத்துக்கு ஆளாகிறான். இதனால், தான் இழிவுபடுத்தப்பட்டு நரகத்திற்குரியவனாக மாற ஒருவகையில் மானுடனே காரணமாக இருந்துவிட்டான் என்ற ஆத்திரத்தில் அந்த மானுட இனத்தை எப்படியாவது இழிவிற்கு ஆளாக்கி தன்னுடன் மானுட இனத்தையும் நரகத்திற்கு அழைத்து செல்ல வேண்டும் என்ற உறுதி கொள்கிறான்.

தனது நோக்கத்தை மானுடர் விஷயத்தில் படிப்படியாக நிறைவேற்றுவதற்காக வேண்டுமென்றே முதலில் மானுடர் நலத்தில் அக்கறை கொண்டவன் போல் நடிக்கிறான்.

இறைவனின் பூரண அதிகாரத்தின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளாத பெரும்பாலான மனித மனத்தின் சுபாவத்தை அவன் அறிந்து இருப்பதால் மானுடனை கடவுள் அருளிய வேதங்களின் பக்கமே செல்லவிட்டு வேதவசனங்களுக்கு இணைவைப்பிற்கு இணக்கமான அர்த்தத்தை தந்து அதனை மானுடருள் பெரும்பான்மையானவர்கள் உணரமுடியாமலேயே அவர்கள் உள்ளத்தில் பதித்து விடுகிறான்.

ஏனெனில் "நிச்சயமாக கடவுள் அவருக்கு இணைவைப்பதை மட்டும் ஒருபோதும் மன்னிப்பதேயில்லை" (4:48. I16) என்பதை சாத்தானும் நன்கு அறிந்தே இருப்பதால் எந்த வகையிலாவது அல்லது எந்த வடிவத்திலாவது.

அல்லது எந்த நிலையிலாவது மானுடனை இணைவைப்பில் தள்ளிவிட ஒவ்வொரு நொடியையும் சாத்தான் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றான் என்பதை நல்லறிவாளர்கள் புரிந்து கொள்வார்கள்.

எனவே மானுடனை இறை அருளை பெறுவதை விட்டும் தடுத்திட சபதம் எடுத்துள்ள சாத்தானின் சதித்திட்டத்தை முழுக்கவனத்துடனும் விழிப்பு உணர்வுடனும் இருந்தால் ஆரம்பத்திலேயே இறை அருளால் கண்டறியலாம். கண்டறிந்தவுடன் அவனது சூழ்ச்சியிலிருந்து விலகி தன்னை முற்றிலும் கடவுளிடம் அர்ப்பணித்து விட்டால் நிச்சயமாக நேர்வழியில் செல்லலாம்.

இறைவன் கூறுகிறார். "மேலும் இவ்வேதத்தில் இப்ராஹீமைப் பற்றி நினைவு கூறுவீராக. அவர் வாய்மையுள்ளவராகவும் நபியாகவும் (வேதம் பெற்றவர்) இருந்தார் (19:41) என்றும்

(இப்றாஹிம் கூறினார்) "வானங்களையும் பூமியையும் படைத்தவரின் பக்கம் ஒரு மனதுடன் என் முகத்தை திருப்பிவிட்டேன். மேலும் ஒரு போதும் நான் இணைவைப்பவர்களில் உள்ளவன் அல்ல" (6:79) என்றும்

"உங்களுக்கு இப்றாஹிமிடத்திலும் அவரது தோழர்களிடத்திலும் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது" (60:4) என்பதையும் நினைவூட்டி செயல்பட தூண்டுகிறார்.

கடவுள் மேலும் கூறுகிறார் அவர்கள் எத்தகையோரென்றால் அனைத்து சொற்களையும் பரிசீலிப்பார்கள். பின்பு சிறந்ததை எடுத்து பின்பற்றுவார்கள். கடவுள் நேர்வழி செலுத்துவது இத்தகையவர்களைத்தான். இவர்கள்தாம் நல்லறிவைப் பெற்றவர்கள்" (39:18)

இறைவன் அருளிய வேதங்களை உள்ளச்சத்துடன் கற்பவர்களுக்கு அவரே அதன் சரியான அர்த்தங்களை புரிய வைத்து நேர்வழியில் செலுத்துகிறார்.

எனவே கடவுள் அருளால் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியாளர்களாக திகழ வேண்டுமானால் நாம் அனைவரும் உண்மையான Submitters-களாக மாறி இறைவனையே முற்றிலும் சார்ந்து அவரையே அதிகமதிகம் நினைவு கூர்ந்து அவரிடமே பிரார்த்திப்போமாக.

## “புகழ் அனைத்தும் இறைவனுக்கே”

# சரணடைதல்

K.H. ஜீனத்

இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், இறைவனின் மாபெரும் கருணை இந்த மனித குலத்தின் மீது இறங்கியிருக்கிறது. இறைவன் தனது தூதரை அனுப்பி பலப்பல விஷயங்களை. குர்ஆனிய உண்மைகளை நமக்கு விளங்கத் தந்திருக்கிறார். இந்த இறைசெய்திகளைப் பெற்றுக் கொண்ட நாம் எவ்வாறு இறையன்பைப் பெறுவதற்கான தகுதிகளை மேம்படுத்திக் கொள்வது என்பது பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

ஒரு நபர் (ஆணோ / பெண்ணோ ) இறை செய்திகளைப் பெற்றுக் கொண்ட பின், உடனடியாக அவற்றை இறை செய்திகள்தான் என்பதை அறிந்து இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள முன்வர வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாக இருக்கிறது. இதற்கான ஒரு வசனத்தைக் காண்போம்.

"தூதர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பட்டதை நம்புகிறார்; விசுவாசிகளும் நம்புகின்றனர். அல்லாஹ்வையும் மலக்குகளையும். அவருடைய வேதங்களையும், அவருடைய தூதர்களையும் நம்புகிறார்கள். "நாம் தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை. இன்னும் நாங்கள் 'செவியுற்றோம்; வழிப்பட்டோம்;' எங்கள் இறைவனே! உம்மிடமே மன்னிப்புக் கோருகிறோம். உம்மிடமே மீள்கிறோம்." என்று கூறுகின்றனர்." (2:285)

இவ்வசனத்தில் "இறைவனுக்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்" என்ற தூதுச் செய்தியைக் கேட்டவுடன் ஏன்? எதற்கு? என்று வீண் கேள்விகள் கேட்டுக் கொண்டிராமல், "செவியுற்றோம்; வழிபட்டோம்". என்று விசுவாசிகள் கூறுவதாக இறைவன் கூறகின்றார். இங்கு செவியுற்ற உடனடியாக வழிபடுதல் என்பது விசுவாசிகளின் குணாதிசயமாகக் கூறப்படுகிறது. இதுதான் முதற்படி. இதன்பின்பே இறை வேதங்களை ஆராய்வதும் விளக்கங்கள் தேடுவதும் ஆகும்.

தூதர்கள் இறைசெய்திகளைக் கொண்டுவந்த போதெல்லாம் 'முஸ்லிம்களில் (இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொண்டவர்களில்) நான் முதன்மையானவன்' என்று கூறுவதாகக் குர்ஆன் கூறுகிறது. 2:131. 6:14. 163. 10:72. 39:12 மேலும் இறைவன்தான் நம்மைப் படைத்தவர் என்பதிலும். அவருக்கு மட்டுமே முற்றிலும் வழிபடுதல் வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக் கொள்ளவோ எதிரிடையாக வாதிடுவதற்கோ இறைவனுடைய எந்தப்

படைப்பிற்கும் அருகதையில்லை. ஆயினும் உண்மையான இறைவிசுவாசிகளுக்கு மட்டுமே 'செவியுற்றோம்; வழிபட்டோம்' என்பது விரும்பத்தக்க காரியமாக இருக்கிறது.

இதற்கு அடுத்தபடியாக, நாம் எவ்வாறு இறையன்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்? அதற்கான முயற்சிகள் என்னென்ன? என்பவற்றை விசுவாசிகள் அறிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதுபடியாக இறைவனால் குர்ஆனில் நமக்கு விதியாக்கப்பட்டுள்ள கட்டாயக் கடமைகள். இவற்றை (சாட்சி பிரமானம். தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்) நாம் அப்பழுக்கின்றி பரிசுத்தமான முறையில் இறைவனுக்கு அர்ப்பணிக்க, தூதர் நமக்கு உதவுகின்றார். இதுவரை நாம் செய்து வந்த கட்டாயக் கடமைகளில் உள்ள அழுக்குகளைச் சுட்டிக் காட்டுகின்றார். எனவே நாம் அவற்றை நீக்கி நமது இறைவணக்கத்தைப் பரிசுத்தப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இணைவணக்கத்தைத் தூய்மையாக்கி இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டால் போதுமா? 'உண்மையான இறை விசுவாசிகள் நற்காரியங்களில் முந்திக் கொள்வார்கள். நாம் நற்காரியங்களில் முந்திக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்கும் முன்னதாக தீய செயல்களை விட்டு விலகி நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டியதாகிறது.

தீய செயல்களைக் குர்ஆன் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. பொய், புறம், களவு, சூது, மது, பொறாமை, விபசாரம். கடும் வட்டி இவை அருவருக்கத் தக்க செயல்களில் உள்ளவையாகக் குர்ஆன் கூறுகிறது. மனிதர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களாகவே இருக்கின்றனர். இதில் உண்மையான இறைவிசுவாசிகளும் விதிவிலக்கல்ல.

... மனிதன் பலஹீனமானவனாகவே படைக்கப்பட்டிருக்கின்றான். (4:28)
மனிதன் அவசரக்காரனாகவே படைக்கப்பட்டிருக்கின்றான். (70:19, 17:11, 21:37)
ஆன்மாக்கள் சுயநலம் கொண்டவையாகவே இருக்கின்றன. (4:128)
மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கின்றான். (14:34, 43:15, 80:17)
மனிதன் கருமித்தனமுள்ளவனாக இருக்கின்றான். (17:100)
மனிதன் அதிகமாகத் தர்க்கம் செய்பவனாகவே இருக்கின்றான். (18:54)

மேற்கூறிய வசனங்களில் மனிதனின் பொதுவான குணங்களை இறைவன் சுட்டிக் காட்டுகின்றார். இத்தகைய குணங்களின் காரணமாகவே தீய செயல்களை நாடி மனிதன் செல்கின்றான். ஆனால் உண்மையான இறை விசுவாசிகளைப் பற்றி இறைவன் கூறுவதைக் கவனியுங்கள்.

பொறுமையுடையோராகவும், உண்மையாளராகவும், அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபடுவோராகவும், தான தர்மங்கள் செய்வோராகவும் ஸஹர் பின்னிரவு நேரத்தில் மன்னிப்புக் கோருவோராகவும் இருப்பர் (3:17)

அவர்கள் இன்பமான நிலையிலும் துன்பமான நிலையிலும் செலவிடுவார்கள்; தவிர கோபத்தை அடக்கிக் கொள்வார்கள். மனிதர்களை மன்னிப்போராய் இருப்பார்கள். நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றார் (3:134)

தவிர. மானக்கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும் அல்லது தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அவர்கள் அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ் தவிர வேறுயார் பாவங்களை மன்னிப்பார்? அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் காரியங்களில் தரிப்பட்டிருந்து விட மாட்டார்கள் (3:135)

(இன்னும் வசனங்கள் 9:71, 23:1-11. 25:63-76 இவற்றைக் காண்க)

இனி தீய செயல்களாக இறைவன் குறிப்பிடுவன யாவை? அவற்றை எவ்வாறு இனங்காண்பது? என்பது குறித்துப் பார்ப்போம். இங்கு ஒரு சில தீய செய்கைகளை இனம் கண்டு கொள்ள முயற்சி செய்வோம். உதாரணமாக. மதுவும் சூதும் தீய செய்கைகள் என நாம் குர்ஆனில் இருந்து கற்றுக் கொள்கிறோம். (2:219, 5:90.9) இவற்றில், போதையை உண்டாக்கக் கூடிய எந்த பொருளாயிருந்தாலும் அதை மதுவாகவே கொள்ள வேண்டும். இன்றைய நவீன யுகத்தில் கண்டறியப்பட்டுள்ள பிறபோதைப் பொருட்களைக் குர்ஆன் சுட்டவில்லை என்ற எண்ணி நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்தல் கூடாது. சூதாட்டத்தை எடுத்துக் கொண்டோமானால் லாட்டரிச்சீட்டும் சூதாட்டம்தானே? இதனை இறைவன் அங்கீகரிப்பதாகக் கொள்வதும் தீதேயாகும். 'வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள்' (17:31) என்று இறைவன் கூறகிறார். ஆனால் இன்று. 'அபார்ஷன்' என்பது சர்வசாதாரணமாக எல்லோராலும் தவறே இல்லாத செய்கையாக அங்கீகரிக்கப்பட்டு விட்டது. இதுவும் முற்றிலும் சிசுக் கொலையேயாகும். வசனம் 46:15ல் கர்ப்பமான காலத்திலிருந்தே மனித வாழ்வு தொடங்கிவிட்டதாக இறைவன் கூறுகிறார். இவற்றைப் போலவே இறைவனால் குர்ஆனில் சுட்டிக்காட்டப்படுகின்ற பிற தீய செய்கைகளையும் நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பொருள் விளங்கிக் கொள்ள முன்வரவேண்டும். பின்னர் நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரே நாளில் நம்மை முற்றிலும் மாற்றிக் கொள்ள இயலாது எனினும் ஒவ்வொன்றாகக்

குர்ஆன் வசனங்களைப் படித்து படித்து நம்மிடமுள்ள குற்றம் குறைகளை நீக்கிக் கொண்டோமானால் இறையன்பைப் பெற்றுக் கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ். இறைவனுக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்தல் என்பது வாய்ச்சொல் அளவில் நின்று விடாமல் உளப்பூர்மாக செயல்படுத்த ஆரம்பித்தோமானால் வெற்றி நமக்குரியதாக இருக்கிறது. Submission - இஸ்லாம் என்பது மண்ணிலிருந்து கண்டெடுத்த மிக உயர்ந்த வைரம் போன்றது. குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் சிந்தித்துக் செயலாக்குவதன் மூலம் மட்டுமே இந்த வைரம் பட்டை தீட்டப்பட்டு ஜொலிக்கும்.

(உங்களில் எவர் நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களை அவர்களுக்கு முன்னிருந்தோரை ஆட்சியாளர்களாக்கியது போல், பூமிக்கு நிச்சயமாக ஆட்சியாளர்களாக்கி வைப்பதாகவும் இன்னும் அவர் அவர்களுக்காகப் பொருத்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிலைப்படுத்துவதாகவும். அவர்களுடைய அச்சத்தைக் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றிவிடுவதாகவும் இறைவன் வாக்களித்திருக்கின்றார்) 24:55

எனவே இம்மையின். மறுமையின் வெற்றிகளை சுலபமாக நாம் அடைய குர்ஆன் என்னும் கயிற்றைப் பலமாகப் பற்றிக் கொண்டு முன்னேற விழைவோமாக.

## ஞானம் மிகுந்த குர் ஆன் கட்டுரையில் குறிப்பிடப்படும் வசனங்கள்

எனவே. தங்களுடைய சொந்தக் கரங்களால் வேதத்தைச் சிதைப்பவர்களுக்குக் கேடுதான். அற்ப பொருளாதாயத்துக்காக பின்னர் கூறுகின்றனர். "இதுதான் கடவுள் வெளிப்படுத்தியது." இத்தகைய சிதைவுக்காக அவர்களுக்குக் கேடுதான். அவர்களுடைய சட்டவிரோதமான சம்பாத்தியங்களுக்காகவும் அவர்களுக்குக் கேடுதான் (2:79)

தூதரே! அவர்களுடைய இதயங்கள் நம்பிக்கை கொள்ளாத அதே சமயம் வாய்களால். “நாங்கள் நம்பிக்கை கொண்டோம்” என்று கூறி நிராகரிக்க விரைந்து செல்பவர்களைப் பற்றி நீ துக்கம் கொள்ளக்கூடாது. யூதர்களில் சிலர் பொய்களைக் கேட்டுக் கொண்டனர். உம்மைச் சந்தித்திராதவர்களையும். மேலும் வார்த்தைகளை அவற்றின் தொடர்புகளிலிருந்து துண்டிப்பவர்களையும் அவர்கள் சந்தித்தனர். மேலும் கூறினர். “நீங்கள் இன்னின்னவற்றைக் கொடுக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்” ஆனால் நீங்கள் இதிலிருந்து வித்தியாசமாக வேறெதுவும் கொடுக்கப்பட்டால், எச்சரிக்கையாக இருங்கள்". யாரைக் கடவுள் திசை

திருப்ப நாடுகின்றாரோ அவருக்கு கடவுளை மீறி எந்த உதவியும் நீங்கள் செய்துவிட முடியாது. கடவுள் அவர்களுடைய இதயங்களைக் கழுவ விரும்பவில்லை. அவர்கள் இவ்வுலகில் இழிவுக்குள்ளாவார்கள், மேலும் மறுமையிலோ அவர்கள் கடுமையான தண்டனையை அனுபவிப்பார்கள். (5:41)

பின்னர். முந்திய வேதங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் அவற்றின் இடத்தில் அவற்றுக்குப் பதிலாகவும் சத்தியம் நிறைந்த இவ்வேதத்தை நாம் உமக்கு வெளிப்படுத்தினோம். கடவுளின் வெளிப்பாடுகளுக்கு ஏற்பவே நீர் அவர்களிடையே தீர்ப்பளிக்க வேண்டும். உமக்கு வந்த சத்தியத்திலிருந்து அவர்கள் மாறுபட்டால் நீர் அவர்களுடைய விருப்பங்களைப் பின்பற்றக்கூடாது. உங்களில் ஒவ்வொருவருக்கும் நாம் சட்டங்களையும், மாறுபட்ட சடங்கு முறைகளையும் நாம் விதித்துள்ளோம். கடவுள் நாடினால் உங்களை ஒரே சமூகமாக ஆக்கியிருப்பார். ஆனால் இவ்விதமாக. அவர் உங்களில் ஒவ்வொருவருக்கும் தந்த வெளிப்பாடுகளின் மூலம் உங்களைச் சோதனைக்கு உள்ளாக்குகின்றார். நீங்கள் நன்மையில் போட்டிபோட வேண்டும். கடவுளிடமே உங்களின் இறுதி விதி உள்ளது. - உங்கள் அனைவருடையவும் - பின்னர் நீங்கள் செய்த ஒவ்வொன்றையும் குறித்து அவர் உங்களுக்கு அறிவிப்பார் (5:48)

உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எந்த ஒரு தூதரோ அல்லது நபியோ (வேதம் பெற்ற தூதர்) சாத்தான் அவர்களுடைய நாட்டத்தில் குறுக்கிடாது இருந்ததில்லை. பின்னர் சாத்தான் செய்தவற்றைக் கடவுள் பயனற்றதாக்கி விடுகிறார். கடவுள் தன் வெளிப்பாடுகளை முழுமையாக்குகின்றார். கடவுள் அனைத்தும் அறிந்தவர். ஞானம் மிகுந்தவர். (22:52)

அவர் இவ்விதமாக. சாத்தானின் சூழ்ச்சிகளை நெஞ்சங்களில் சந்தேகங்களைத் தாங்கி இருப்பவர்களுக்கும். கல் நெஞ்சம் கொண்டோருக்கும் ஒரு சோதனையாக அமைத்து விடுகின்றார். தீயவர்கள் எதிரணியில் தங்கி இருக்க வேண்டியவர்களேயாவர் (22:53)

அறிவைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் தங்கள் இரட்சகரிடமிருந்து வந்த சத்தியத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள். பின்னர் அதில் நம்பிக்கை கொள்வார்கள். மேலும் அவர்களுடைய இதயங்கள் அவற்றை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும். மிகவும் நிச்சயமாக நம்பிக்கை கொண்டவர்களைக் கடவுள் நேர்வழியில் செலுத்துகின்றார். (22:54)

நம்ப மறுப்போரைப் பொறுத்தவரை நேரம் அவர்களிடம் தீடீரென வரும் வரையிலோ, அல்லது கடுமையான அந்நாளின் வேதனை அவர்களிடம் வரும்

வரையிலோ தொடர்ந்து நெஞ்சங்களில் சந்தேகங்களைத் தாங்கிக் கொண்டிருப்பார்கள். (22:55)

........ நீங்கள் திரும்பி விட்டால், அவர் வேறு மனிதர்களை உங்கள் இடத்தில் மாற்றி அமைத்து விடுவார். மேலும் அவர்கள் உங்களைப் போன்று இருக்க மாட்டார்கள். (47:38)

ஒவ்வொரு நபிக்கும் மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள அவர்களுடைய எதிரிகளை, அடிப்படை அற்ற அழகிய வார்த்தைகளைக் கொண்டு ஏமாற்றுவதற்காக, ஒருவருக்கொருவர். கற்பனையான எண்ணங்களை ஊட்டிக் கொள்ள நாம் அனுமதித்தோம். உமது இரட்சகர் நாடியிருந்தால் அவர்கள் இதனைச் செய்திருக்க மாட்டார்கள். அவர்களையும் அவர்களுடைய புனைந்துரைகளையும் புறக்கணித்து விடும். (6:112)

இது. மறுமையை நம்பாதவர்களின் புத்திகள் இத்தகைய புனைந்துரைகளைக் கேட்டு அவற்றை ஏற்றுக் கொண்டு அவர்களுடைய உண்மையான உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்காகவேயாம். (6:113)

அவர்கள் கடவுளைக் கருத வேண்டிய முறைப்படிக் கருதவில்லை. இவ்விதமாக. அவர்கள் கூறினர். "கடவுள் எந்த மனிதருக்கும் எதனையும் வெளிப்படுத்தவில்லை " கூறும் : பின்னர் யார், ஒளியுடனும், நேர்வழியுடனும் மக்களுக்காக மூஸா கொண்டு வந்த வேதத்தை வெளிப்படுத்தியவர்? நீங்கள் அதனை மக்களுக்கு அறிவிப்பதற்காக தாள்களில் இடுகின்றீர்கள். அதே வேளையில் அவற்றில் ஏராளமானவற்றை மறைக்கின்றீர்கள். நீங்கள் அறியாதவற்றைக் கற்றுக் கொடுக்கப்பட்டீர்கள் - நீங்களும் உங்கள் பெற்றோர்களும் - கூறும் கடவுள் (தான் அவற்றை வெளிப்படுத்தினார்)". பின்னர் அவர்களுடைய அலட்சிய மனோபாவத்தில் விளையாடிக் கொண்டிருக்குமாறு அவர்களை விட்டு விடும். (6:91)

அவர்களைப் பின்தொடர்ந்து வேதத்தை வாரிசாகப் பெற்ற புதிய தலைமுறையினரை அவர்களுடைய இடத்தில் மாற்றினார். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் "நாங்கள் மன்னிக்கப்படுவோம்" என்று கூறி இவ்வுலக வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். பின்னர். அவர்கள் தொடர்ந்து இவ்வுலகப் பொருள்களையே தேர்ந்து எடுத்துக் கொண்டனர். அவர்கள் வேதத்தை ஆதரிக்க வேண்டுமென்றும், கடவுளைப் பற்றி சத்தியத்தைத் தவிர வேறெதுவும் கூறக் கூடாதென்றும் உறுதிமொழி எடுத்துக் கொள்ளவில்லையா? அவர்கள் வேதத்தைப் படிக்க வில்லையா? நிச்சயமாக மறுமையின் வீடானது நன்மையில் நிலைத்திருப்போருக்கு மிகவும் மேலானதாகும். நீங்கள் புரிந்து கொள்ள வேண்டாமா? (7:169)

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19
# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.

www.kadavulmattum.org

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய
இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662